சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்

இலக்கிய மாத இதழ். 2 அண

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம் —பாரதி.

மலர் 1 இதழ் 8 | டிசம்பர் 1955 | மன்மத கார்த்திகை

3-12-1884; ஜனதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் பிறந்தார்.

5-12-1791 : மேலே நாட்டு சங்கீத உலகின் சாம்ராட்டாக விளங்கிய மோஜார்ட் காலமானார்.

5—12—1954: நாட்டு விடுதலைக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் தம்முடைய எழுத்தின் வன்மையால் மகத்தான சேவை செய்த 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி காலமானார்.

9-12-1878: ராஜாஜி பிறந்தார்.

11-12-1882: மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்தரர்.

14-12-1799: அமெரிக்க ஐக்கிய நாடுகளைத் தோற்றுவித்தவரும், அந்நாட்டின் முதல் ஜனதிபதியுமான ஜார்ஜ் வாஷிங்டன் காலமானர்.

24-12-1524: போர்ச்சுகல் நாட்டுக் கடலோடி வாஸ்கோ டி காமா காலமானர். இந்தியாவில் போர்ச்சுகீசியர் ஆட்சி ஏற்பட வழி வகுத்துக் கொடுத்தவர் இவர். இவர்தான் மேலே நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு, நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவருவதற்கான கப்பல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தார்.

27-12-1822: பிரெஞ்சு உடற்கூறு சாஸ்திரி லூயி பாஸ்சர் பிறந்தார். தொத்து வியாதிகளுக்கு ஊசிகுத்தும் முறையைக் கண்டுபிடித்தவர் இவர்.

30-12-1944: பிரெஞ்சு எழுத்தாளர் ரோமெய்ன் ரோலெண்டு காலமானர். இவரது எழுத்துக்கள் மக்களது ஆசாபாசங்களை, போராட்டங்களைப் பிரதிபலித்தன. இவருக்கு 1915ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர் மகாத்மாகாந்திஜியின் நண்பர்.

வரலாற்றில் இம்மாதம்

"நெஞ்சு பொறுக்கு திலையே—இதை
நினைந்து நினைந்திடும் வெறுக்குதிலையே"

என்று மனித குலத்தின்மீது ஆழ்ந்த நம்பிக்கை வைத்து, மக்களின் இயக்கத்தை முன்னிருத்தி, இலக்கியப்பணி புரிந்தான் பாரதி. பாரதியின் இந்த இலக்கிய மரபுக்கும் புதுமைப் பித்தனுக்கும் என்ன சம்பந்தம்? புதுமைப் பித்தனின் இலக்கியம் மக்களுக்குக் காட்டும் இலட்சியச் சித்திரங்கள் எவை?

புதுமைப் பித்தன்

ஆர். கே. கண்ணன்

புதுமைப்பித்தனின் உடலைக் கொன்றது காச நோய். ஆனால், காச நோயைவிட, ஏன் எல்லா நோய்களையும்விட மிகக் கொடிய நோய் அவர் உள்ளத்தைக் கொன்றது. அதுதான் நிராசை, நம்பிக்கை - வரட்சி, விரக்தி, என்கிற நோய்.

அவர் உடல் இறந்தது 1948 ஜூன் 30-ம் தேதியன்று. ஆனால் அவர் உள்ளம் உலர்ந்து வெந்து தணிந்தது எப்போது என்று சொல்ல முடியாது. இலக்கிய வுலகில் பிரயாணத்தைத் தொடங்குவதற்கு முன்பே அது நடந்திருக்கவேண்டும்.

காச நோயை ரொம்ப காலத்துக்கு உதாசீனம் செய்து, கடைசி நேரத்தில்தான்சிகித்சை பெற முற்பட்டார் புதுமைப் பித்தன். ஆனால், மனத்தை வாட்டி வதைத்த நிராசை நோய்க்கு அவர் என்றுமே சிகித்சை தேட முற்படவில்லை.

காச நோயைப் போக்கிக் கொள்வதற்குக் கடைசி நேரத்திலாயினும் டாக்டரை அணுகினார். ஆனால் மனநோயைப் போக்க அவர் மக்களை அணுகவே யில்லை....

அவர் சிருஷ்டித்த இலக்கியம் விரக்தியின் வடிவம். "...என் கதைகளில் ஒவ்வொன்றும் ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால், என் கதைகளின் பொதுத்தன்மை நம்பிக்கை வரட்சி" என்று புதுமைப்பித்தனே ஒப்புக் கொள்கிறார்...

புதுமைப்பித்தன் யார்? அவர் வாழ்ந்த காலம் எப்படிப்பட்டது? அவர் வாழ்ந்த காலத்திய மக்களும், உலகமும் எங்கே போய்க் கொண்டிருந்தார்கள், புதுமைப் பித்தன் எங்கே போய்க்கொண்

டிருந்தார்? இலக்கியத்தில் அவரது நம்பிக்கை வரட்சி விதைத்து அறுத்த அறுவடை என்ன? புதுமைப்பித்தனின் உலக நோக்கும், இலக்கிய விசாரமும் எப்படிப்பட்டவை? பாரதியின் புதிய இலக்கிய மரபுக்கும், இலக்கிய நோக்குக்கும் புதுமைப்பித்தனுக்கும் என்ன சம்பந்தம்?

புதுமைப்பித்தனின் கதைகளில் ஏதாவது பத்துக் கதைகளை இங்கொன்றும் அங்கொன்றுமாகப் படித்தாலே போதும். வாசகர்களின் மனத்தில்உடனே இந்தக் கேள்விகள் எழுவது நிச்சயம்...

* * *

தமிழிலக்கியத் துறையில் பணிபுரியத் துணிந்து புதுமைப்பித்தன் எழுத்தாணியைக் கைப்பிடித்த காலம் 1933-லிருந்து 1948 வரை. அந்தக் காலம் எப்படிப்பட்டது?

1930—31-லிருந்தே பார்ப்போம்; உலகப் பொருளாதார நெருக்கடி என்கிற பேரிடி விழுந்து முதலாளித்துவ உலகம் கலகலத்துச் சரியும் நிலை. பாசிச, நாஜிஸப் பேய்கள் தலை விரித்தாடத் துவங்கிய காலம். சீன - மஞ்சூரியாவை ஜப்பான் 1931ல் ஆக்ரமித்தது ஹிட்லர் 1933-ல் ஜெர்மனியில் ஆட்சியைக் கைப்பற்றினன். அப்புறம் ஐரோப்பாவையும் உலகையும் கைப்பற்றப் புகுந்தான். 1931-ம் ஆண்டில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பூர்த்தி செய்து, சோவியத் யூனியனில் சோஷலிஸம் தழைக்கலாயிற்று, சோஷலிஸப் பூங்காவில் செடி நட்ட காலத்தில் (1928) நேரு ருஷ்யாவில் இருந்தார். செடி கிளைத்து வளர்ந்து பூத்துக் குலுங்கிய காலத்தில் (1931) கவியரசர் தாகூர் ரஷ்யாவில் இருந்தார்.

உலகப் பொருளாதார மந்தம் இந்தியாவை வெகுவாகச் சீரழித்தது. வேலையில்லாமையும் வறுமையும், சீரழிவும் நாட்டை அங்குலமங்குலமாகக் கொன்று தின்றது. அதனுல்தான் சத்தியாக்கிரகப் போரை காந்திஜி நிறுத்தி காந்தி-இர்வின் ஒப்பந்தம் நடந்து அரசியல் விடுதலை இயக்கம் 1931–32-ல் ஸ்தம்பித்த போதிலும், ஸ்தம்பிப்பு நெடு நாளைக்கு நீடிக்கவில்லை. தேசீய இயக்கத்தில் தீவிர வாதப்போக்கும், கம்யூனிஸ்ட்-சோஷலிஸ்ட் இயக்கமும் ஸ்தாபன வடிவமெடுத்து உயிர்ப்புடன் இயங்கின, வளர்ந்தன. 1934 மத்திய சட்டசபைத் தேர்தலும், 1935—'36 மாகாணப் பொதுத்தேர்தல்களும், "ஜஸ்டிஸ் கட்சி" போன்ற ஏகாதிபத்தியத்தின் தரகர்களை வீழ்த்தி தேசீய இயக்கம் வெற்றி பெறச் செய்தன. காந்தீயத்துக்குப் போட்டியாக மார்க்ஸிஸம் அரசியல் இயக்கத்தில் வளர்ந்தது. படித்த வகுப்பார் மத்தியில் மட்டுமல்ல, வாலிபர்கள் மத்தியில் மட்டுமல்ல, தொழிலாளர் உழைப்பாளிகள் மத்தியில்கூட.

"காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கூழுமில்லை"

என்ற பாடலைக்கொண்டு தமிழகமெங்கும் தொழிலாளி வர்க்கத்தின் இதயத்தைக் கவர்ந்து மாபெரும் இயக்கத்தைக் கட்டினூர் ஜீவானந்தம். பூர்ண சுதந்திரம் என்கிற காங்கிரஸ் லட்சியத்திற்கு மார்க்ஸிஸ்ட் ஒளியிலே வியாக்யானந் தந்து பாட்டாளி மக்களின் மனத்தைப் பண்படுத்தி அணி திரட்டியது ராமமூர்த்தியின் வாதத் திறமையும் அரசியலறிவும். தத்துவ ஆராய்ச்சியிலும், தேசீய அரசியல் இயக்கத்திலும், தொழிலாளர் போராட்டங்களிலும், விவசாயிகள் கிளர்ச்சியிலும், மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும் மக்கள் ஈடுபட்டனர். காந்திஜீ, நேரு, சுபாஷ் போஸ், பி.ஸி. ஜோஷி, ஜயப்பிரகாஷ் நாராயண் — என்ற பெயர்கள் ஒவ்வொன்றும் விடுதலை இயக்கத்தின்பால் மக்களை வசீகரித்தன. பெயிஸ்பூர், ஹரிபுரா, திரிபுரா, ராம்கர் முதலிய காங்கிரஸ் மகாநாடுகளில் பலத்த அரசியல் சர்ச்சைகள். அந்தக் காலத்தை நினைத்தால் இன்றைக்கும் மெய்சிலிர்க்கிறது மனம் புளகமடைகிறது. அவ்வளவு உயிர்த்துடிப்புள்ள கால கட்டத்தில் விழிப்புற்று மக்கள் சேவையிலீடுபடுவதற்கு என்ன புண்ணியம் செய்தேன் என்று இன்றைக்கும் அந்தத் தலைமுறையைச் சேர்ந்த வாலிபர்கள் அந்தக் காலத்தை வாழ்த்துகின்றனர்.

பிறகு யுத்தகாலம், அடக்குமுறை, மக்கள் எதிர்ப்பு, ஆகஸ்ட் போராட்டம், ஏற்றம் இறக்கம், யுத்த பிற்காலம், கடைசியாக பாரத நாட்டிற்கு விடுதலை!

எவ்வளவு மகத்தான காலம்! விடுதலைச் சிசு கருவில்வளர்ந்து பிரசவ வேதனையதிகமாகிக் கடைசியில் பிரசவமாகி பாரதத் தாயின் அணைப்பில் வளரத்தான் செய்தது. பிரசவ வேதனையின் போது அலறலும், ரண சிகித்சையும், இரத்தப் போக்கும் இருந்தன. கேட்டோம், பார்த்தோம். பயந்தோமில்லை. கண்ணை மூடிக் கொள்ளவில்லை, காதைப் பொத்திக் கொள்ளவில்லை. முன்பு சகித்தோம், பின்பு சந்தோஷித்தோம்.

அதுதான் அந்தக் காலம். புதுமைப் பித்தன் இலக்கியப் பணிபுரிந்துவந்த காலம்.

இந்த அதியற்புதக் காட்சிகளை, ஆனந்தமயமான காட்சிகளை, தத்துவ விசார உற்சாகத்தை, விடுதலை இயக்கத்தின் பதினெட்டாம் பெருக்கை, பாட்டாளிகளின் சோஷலிஸ கீதத்தை, ஒரு மாபெரும் நாட்டின் புனர்ஜன்மத்தை, புதுமைப் பித்தன் கண்டாரா?

கண்டார்! கண்டு, கண்ணை மூடிக்கொண்டார்.

கேட்டார்! கேட்டு காதைப் பொத்திக்கொண்டார்.

பாரதியை விடுதலைபெற்ற பிராமதேயஸ் (Prometheus) என்ருர், புதுமைப் பித்தன். போராடிப் போராடி, நாடே விடுதலை பெற்றது. பாரதமே பிராமதேயஸ் போல் அடிமைத் தளையறுத்து விடுதலை பெற்றது.

அந்த நாட்டின் வழிநடையில், இயக்கத்தில், ஓட்டத்தில், சோதனையில், சோர்வில், சோகத்தில், வெற்றியில், புதுமைப் பித்தன் கலந்தாரா? இல்லை.

மக்கள் வெள்ளம் பெருகி ஆர்ப்பரித்துச் சென்றபோது, சாலை ஓரமாக நின்றுவது மலரைச் சொரிந்தாரா, கொடி ஆட்டி உற்சாகப்படுத்தினரா, கோஷமிட்டு தமதுஈடுபாட்டைத் தெரிவித்தாரா? இல்லை.

போராடும் மக்களைக் கண்டார், முகத்தைச் சுளித்தார். முகத்தை திருப்பிக் கொண்டார். மக்களை விட்டு விலகிப்போனுர்.

உயிர்துடிப்புடன் இயங்கும் சமுதாயத்தை விட்டோடினர். உடல் ஒடுங்கி, மனம் ஒடுங்கி, உயிர் ஒடுங்கி வரும், நபர்களையும், காட்சிகளையும் மட்டுமே தேடித் தேடி அலைந்தார்.

குளம் என்ருல் அதில் பாசி படர்ந்திருப்பது இயல்பு. ரொம்பப் பழைய காலத்திய குளம், மராமத்துச் செய்யப்படாத குளம் என்ருல் பாசி அதிகமாக இருக்கும், நாற்றம் அதிகமாக இருக்கும் என்பதும் இயல்பு. ஆனல் அதே சமயத்தில், பாசி அதிகமாகி நாற்றம் அதிகமாகிற காரணத்திற்காகவே அந்தக் குளத்தைக் குழப்பி, பாசியைப்போக்கி சுத்தப்படுத்துவதும் இயல்புதான், மனித இயல்புதான்.

பாசியை மாத்திரம் பார்த்துக் கொண்டேயிருந்தால் போதுமா? பாசியை நீக்கும் மனித முயற்சியைப் பார்க்கவேண்டாமா? நீ நீக்காமல் ஒதுங்கிப் போனுலும் பரவாயில்லை, பிறர் நீக்குவதையாவது பார்க்க வேண்டாமா? நீ வழி காட்டாமல் விலகி நின்ருலும் பரவாயில்லை, பிறர் நீக்குவதைக் கண்டாவது சந்தோஷப்படவேண்டாமா? உனக்கு தன்னம்பிக்கை இல்லாதிருக்கலாம். பிறர் மீதாவது நம்பிக்கை இருக்க வேண்டாமா, முயற்சி வெற்றி பெரும் என்று? தனி மனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையேயுள்ள குறைந்தபட்ச உறவு இதுதானே? இந்தக் குறைந்தபட்ச உறவுகூட மறந்தால்? மறுத்தால்? மறைத்தால்?

அப்புறம் சமுதாயத்தைச் சித்திரிக்கும் உனது இலக்கியத்தை எப்படி யதார்த்தவாதரீதியான இலக்கியம் என்பது?

சமுதாயத்தின் கேடுகளைச் சித்திரித்தான் பாரதி. அதோடு, அதைக் களைந்தெறியும் மனித முயற்சியையும் சித்திரித்தான். அதோடு நின்றுகொண்டானு? இல்லை. மனித முயற்சிக்குத் துணையாய் நடந்தான், உற்சாகந் தந்தான், தலைமை வகித்துச் சென்ருன். சோம்பேறிகளை, வாழாவெட்டிகளை, துரோகிகளை தொடை நடுங்கிகளை, அவநம்பிக்கைக்காரர்களை, நிராசை வேதாந்திகளைச் சுட்டுப்பொசுக்கிச் சாம்பராக்கினுன் பாரதி!

தேசீய இயக்கத்தில் தமிழிலக்கியம் புனர்ஜென்மமெடுத்தது. தமிழிலக்கியத்தில் சேவை செய்து, சமுதாய இயக்கத்தின் கருத்துப் பாசறையாக தமிழிலக்கியத்தை நிர்மாணித்தான் பாரதி. இலக்கியத்தையும் சமுதாய வாழ்வையும் ஒன்றுபடுத்

தித் தானும் பார்த்து, பிறருக்கும் காட்டியவன் பாரதி. பாரதியின் திருநாமத்தைத் தாங்கி நிற்பது இந்தப் புதிய இலக்கிய மரபு. இலக்கிய, கலை, கலாச்சாரத் துறைகளில், அழகுநுகர்ச்சி தத்துவத்துறையில் (aesthetics) பாரதி ஸ்தாபித்த தத்துவக் கோட்பாடு அது. நானறிந்தவரை அழகுநுகர்ச்சி இயலுக்கு இவ்வளவு சம்பூர்ணமான உருவமும், உள்ளடக்கமும் தந்து நிர்மாணித்து தமிழ் மக்களுக்கு அளித்த முதல்வன் பாரதியொருவனே.

பாரதியின் அடியொற்றி நடந்தாரா புதுமைப்பித்தன் ? பாரதியின் கலைத்தத்துவக் கோட்பாடுகள் என்ற கோட்டையின் மீது ஏறி நின்று மணிக்கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிட்டாரா, புதுமைப்பித்தன் ?

இல்லை, அதற்குப் பதிலாக அந்தக் கோட்டையைத் தகர்த்துத் தரைமட்டமாக்க, பாரதியின் இலக்கியக் கோட்பாடுகளை, இலக்கிய நடைமுறையை, ஆழக்குழிதோண்டிப் புதைக்க புதுமைப்பித்தன் முயற்சித்தார்.

கடுமையாகத்தான் எழுதுகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள்.

"இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிகள் ; சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும் மைல்கள் ; மனித இலட்சியத்தின் உயிர்நாடி" என்கிறார் ஓரிடத்தில், புதுமைப்பித்தன் ("நமது கலைச் செல்வம்" என்கிற கட்டுரை).

புதுமைப் பித்தனின் வாக்குப்படியே புதுமைப்பித்தனின் இலக்கியத்தை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள்.

புதுமைப்பித்தனின் மேற்கோளை மீண்டும் படியுங்கள். அதில் சில வார்த்தைகளைக் கொட்டையெழுத்தில் போட்டிருக்கிறேன் நான்.

புதுமைப் பித்தனின் இலக்கியம் எப்படிப்பட்ட வாழ்க்கையைச் சித்திரித்தது ? சமுதாயத்தின் வளர்ச்சியைக் காட்டியதா? எப்படிப்பட்ட வளர்ச்சியைக்காட்டியது ? எப்படிப்பட்ட மனித இலட்சியத்தைப் புதுமைப்பித்தன் சித்திரித்தார் ? எப்படிப்பட்ட மனித இலட்சியத்துக்கு புதுமைப்பித்தனின் இலக்கியம் உயிர்நாடியாக இருக்கிறது, புதுமைப் பித்தனின் வாக்குப்படி ?

சங்ககால இலக்கியமும், மாணிக்கவாசகர் முதல் கம்பன் வரை நாம்பெற்ற இலக்கியமும், ஜெயங்கொண்டான் ஔவைப் பாட்டி இலக்கியமும், பாரதியின் இலக்கியமும், அப்படிப்பட்டவை என்று புதுமைப்பித்தனே நமக்கு இடித்துரைக்கிறார். அப்படியானால், புதுமைப்பித்தனின் இலக்கியம் எப்படிப்பட்டதென்று கேட்பது நியாயந்தானே ?

புதுமைப்பித்தனின் பதில் என்ன ? அவர்களுக்கெல்லாம்-சங்கப்புலவர்கள், ஔவை, கம்பன், மாணிக்கவாசகர், பாரதி முதலானோர்க்கெல்லாம் - அந்த வாக்குச் சரிதான், தனக்குச் சரியில்லை என்கிறார். தனக்கென்று வேறொரு வாக்கு அருளிக்கொள்கிறார் புதுமைப்பித்தன்.

திடுக்கிடாதீர்கள். கேளுங்கள்.

புதுமைப்பித்தன் தனக்காக வகுத்துக் கொண்ட இலக்கியப் பாதை இதுதான்!—

"கலை ஒரு பொய்; அதிலும் மகத்தான பொய். அதாவது மனிதனின் கனவுகளும், உலகத்தின் தோற்றங்களும் எவ்வளவு பொய்யோ, அவ்வளவு பொய். இந்தக் கலை என்ற நடைமுறைப் பொய்தான், சிருஷ்டி ரகசியம் என்கிற மகத்தான மெய்யை உணர்த்தக் கூடிய திறன் படைத்தது. கலை என்ற மகத்தான பொழுது போக்குத்தான், சிருஷ்டியின் மகத்தான விளையாட்டைக்காண்பிக்கக்கூடிய நிலையிலிருக்கிறது" என்கிறார் புதுமைப்பித்தன்.

கலை என்பது கனவு, கலை ஒரு பொய், மகத்தான பொய், கலை ஒரு பொழுதுபோக்கு! மனிதனின் கனவுகளும், உலகத்தின் தோற்றங்களும் எவ்வளவு பொய்யோ அவ்வளவு பொய்!

"மனிதனின் கனவுகள் வடிவம் பெறும்பொழுது அது கலையாகிறது. அது நடைமுறை உண்மைக்குக் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லை. அதாவது நடைமுறை உலகமறிந்த இரண்டும் இரண்டும் நான்கு என்ற உண்மைகளுக்கு அதில் இடமில்லை" என்கிறார் புதுமைப்பித்தன். "சிருஷ்டியின் ரகசியத்தை சிருஷ்டியின் மகத்துவத்துடன் வெளிப்படுத்தும் ஒரு பாஷை அது" என்கிறார். ("இதயத்துடிப்பின் பேச்சு" என்கிற கட்டுரை.)

நாட்டு விடுதலை யின்றேல் "அணிகள்வேய் பிணத்தோடொப்பார்" என்றான் பாரதி. விடுதலைக்கென தனது கலையை, கவிதையை பாரதி முழுக்க முழுக்க அர்ப்பணித்தான்.

புதுமைப்பித்தனோ? விடுதலை என்பது இரண்டும் இரண்டும் நான்கு என்கிற வெறும் "நடைமுறை உண்மை", அதற்கு இலக்கியத்தில் இடமில்லை என்கிறார். வறுமையை எதிர்த்துப் போராடுவதும் கேவலம் ஒரு "உலக உண்மை"—அதற்கும் இலக்கியத்தில் இடமில்லை. குளத்திலுள்ள பாசியை நீக்கும் மனித முயற்சி ஒரு பொக்கையான "உலக உண்மை" மட்டுமே—அதற்கும் கலையில் இடமில்லை என்கிறார். விடுதலைப் போருக்கும், வறுமையொழிப்புப் போருக்கும், பாசியை அகற்றிவரும் முற்போக்கு முயற்சிக்கும் — இடமில்லை. இவற்றையெல்லாம் நீக்கிவிட்டு, இவற்றிற்கெல்லாம் அப்பால் நின்றுகொண்டு, ஏதோ ஒரு மானசீகமான "சிருஷ்டி ரகசியத்தை"த் தேடிக் கண்டு பிடிக்கச் செல்வதுதான் கலையாம்! அந்த மாபெரும் இயக்கங்களை, மனித குலத்தின் உயிர்ப்புள்ள நடைமுறையை, "புகைப்படம் பிடிக்கும் கருவியல்ல கலை" என்கிறார்.

மனிதனையே சிறுமைப்படுத்திய பிறகு, சமுதாயப் பிரச்சினைகளை (ஆம், உப்புக்கும் அரிசிக்கும் நடக்கும் போரை) சிறுமைப்படுத்திய பிறகு, தத்துவ சாஸ்திரிகளைச் சிறுமைப்படுத்துவது

வியப்புக்குரிய விஷயமில்லை தான்.

புதுமைப்பித்தன் சொல்கிறார்: "தத்துவ சாஸ்திரி ஒருநாளும் சிருஷ்டியின் மேதையை அறிய முடியாது. என்ன இருக்கிறது என்று பிரித்துப் பிரித்து அளக்கிறான். அறிகிறான். ஆனால் எப்படி இருக்கிறது என்று அவனுக்குத் தெரியாது" என்கிறார் புதுமைப்பித்தன். காந்திஜியைப்பற்றியும் லெனினைப்பற்றியும், இன்னும் உலக தத்துவ ஞானிகள் அனைவரைப்பற்றியும் புதுமைப்பித்தன் கொடுக்கும் நிர்ணயிப்பு இது. எந்த "இஸமும்" இதற்கு விதிவிலக்கில்லை! ஒருகூடைச் செங்கல் அத்தனையும் பிடாரி என்று கூறிவிடுகிறார் புதுமைப்பித்தன்!

"தத்துவ சாஸ்திரிக்கு ஒரு கண்ணீர்த்துளி ஒரு சொட்டு ஜலமும், சில உப்புகளும் என்றுதான் தெரியும். அந்தக் கண்ணீரின் இரகசியத்தை, அதன் சரித்திரத்தை அவன் அறிவானா? அது கலைஞனுக்குத்தான் தெரியும்."

தத்துவஞானியை வேண்டுமென்றே, வெறும் வரட்டுவாதத்திற்காக வென்றே, புதுமைப்பித்தன் பழிக்கிறார். அப்படிச் சொல்பவன் விஞ்ஞானி, தத்துவ சாஸ்திரியல்ல. அந்தக் கண்ணீரின் இரகசியத்தை, அந்தக் கண்ணீரின் சரித்திரத்தை, அறிந்துதானே அவரவர்கள் காலத்தில் ஏசுவும், புத்தரும், வேதமும், குறளும், மார்க்ஸும், லெனினும், காந்திஜியும், ருசோவும், அதே கண்ணீரைத் துடைக்க முயற்சித்ததெல்லாம்? இல்லாவிடில் கண்ணீர் விட்டு வந்த, கண்ணீர் விட்டுவரும், மக்கள் அவர்கள்பால் ஈர்க்கப்படுவதேன்? இல்லை, புதுமைப்பித்தன் சொல்வது உண்மையென்றால், கண்ணீரின் 'இரகசியம்' மக்களுக்கே தெரியாதோ? மார்க்ஸின் 'மூலதனம்' என்ற நூல் தன்னை மனிதனாக்கியது என்றார் பெர்னாட் ஷா. ஷாவின் கருத்து வெறும் சித்தப்பிரமையா?

தத்துவங்களையும், தத்துவப் போரையும் மறுத்துக் கேலிசெய்வதற்கு வழிதேடிக் கொள்கிறார் புதுமைப் பித்தன். ஆனால், அதே கண்ணீர்த் துளியின் "இரகசியத்தை" அறிந்த புதுமைப் பித்தன்—அதே கண்ணீர்த் துளியின் "சரித்திரத்தை" அறிந்த புதுமைப்பித்தன்—தனக்கென்று ஒரு தத்துவத்தைப் படைத்துக்கொள்ளத் தயங்கவில்லை. தானே ஒரு தத்துவ ஞானியாவதற்கு மறுக்கவில்லை.

புதுமைப் பித்தனின் சமுதாயத் தத்துவம் என்ன?

ஓஹோ, சமுதாயத் தத்துவம் என்று எழுதிவிட்டேனா? தப்பு, தப்பு! புதுமைப் பித்தனுக்கு "சமுதாயத் தத்துவம்" பிரயோஜனமில்லை. தனி மனிதத் தத்துவம் தான் அவருக்குப் பிடித்த சரக்கு.

ஏன்? புதுமைப் பித்தனே பதில் தரட்டும்:—

"உடம்புக்கு நம்மை அடிமைப் படுத்திக் கொள்வதை நாம் எல்லோரும் வெறுக்கிறோம்;

உணர்ச்சிக்கு அடிமைப்படுத்திக் கொள்வதைக் கண்டிக்கிறோம்; ஆனால் ஒரு கொள்கை நம்மைத் தனக்கு அடிமைப்படுத்திக் கொள்வதைப் பற்றி கவனிக்கிறோமில்லை'' என்கிறார். (''கை வண்டிச் சரக்கு'' என்கிற கட்டுரை).

''கொள்கைக்கு அடிமைப்படுவது யாக குண்டத்தில் எழுப்பிய விசுவரூபத்துக்கு (அசுரனாலும், அமரனாலும் ஒன்றுதான், நமது நோக்க வேறுபாடு தவிர இவர்களிடையே பேதம் கிடையாது) தானே அடிமைப்படுவது போலத்தான்'' என்கிறார்.

இந்தக் கொள்கைகள் யாவும் எப்படிப்பட்டவை? ''இவை யாவும் அறிவு எழுப்பும், அதாவது தன்னை மங்க வைத்துக் கொள்ள எழுப்பும் பிரமைகள், அது விளையாட்டா, அசட்டுத்தனமா—அல்லது எப்பொழுதும் சலித்துக் கொண்டிருப்பதால் ஏற்படும் அதன் அசைவா? அறிவு அடங்க வேணும்; மங்கலாகாது. அதற்குக் கொள்கை துணை செய்யாது'' என்கிறார்.

வேதத்துக்கும், வியாசருக்கும், சங்கராச்சாரியாருக்கும், ஏசுவுக்கும், திலகருக்கும், காந்திஜிக்கும், மாஜினிக்கும், மார்க்ஸுக்கும் தலைவணங்கிய பாரதி என்னவானான்? சிருஷ்டி ரகசியத்தை அறியாமல் ஜடமாய்க் கிடந்தானா? மக்கள் தான் ஜடமாய்க் கிடக்கிறார்களா? போராடி முன்னேற முடியவில்லையா?

சமுதாயத்தை மொத்தமாக வைத்துப் பார்த்து உருவாக்கும் தத்துவங்கள் அனைத்தும் ''பிரமைகள்.''

அப்படியானால், சமுதாயத்துக்கும் தனி நபருக்கும் உள்ள ஒட்டு உறவுகள் என்னவது?

சமுதாயத் தத்துவங்களை உதறிவிட்டு தனி நபர் தத்துவத்தை — ''சிருஷ்டி இரகசியத்தை''—தேடுகிற, தேடிக் கொண்ட, புதுமைப்பித்தன் சொல்வதைக் கேளுங்கள்.

மனித சரித்திரத்தை ஆராய்ந்து ''உங்கள் கதை'' என்று புதுமைப்பித்தன் ஒரு கட்டுரை எழுதிவைத்துள்ளார். அதில் அவர், தனி மனிதனுக்கு ஒரு சிறைச்சாலையாக சமுதாயம் வாய்த்திருக்கிறது என்கிறார். தனி மனிதனையும் சமுதாயத்தையும் (அதாவது மக்களையும்) எதிரெதிரே நிறுத்தி, நெருங்க முடியாத இரு துருவங்களாகச் சித்திரிக்கிறார் புதுமைப்பித்தன்.

''...தனிமையின் பலவீனத்தை நினைத்துக் கூட்டத்தை ஸ்தாபித்த மனிதனுக்கு அதன் பலத்தால் தான் உயிர் வாழ முடிந்தது. ஆனால், உயிருக்குப் பணயமாகத் தன் சுதந்திரத்தைக் கொடுத்தான். அதாவது, கூட்டத்தின் நன்மைக்காகத் தனி மனிதனின் உயிரைப் பலி கொடுப்பதில் கெடுதல் ஒன்றும் இல்லை என்ற நினைப்பும், அதன் பிறகு அது அவசியம் என்ற நம்பிக்கையும் கூட ஆரம்பித்தன. இதன் விளைவுதான் அரசியல் தத்துவங்கள் எல்லாம்'' என்கிறார் புதுமைப்பித்தன்.

இதைக் கொஞ்சம் ஆழ்ந்து

சிந்தியுங்கள், புதுமையாக ஒன்றும் புதுமைப்பித்தன் சொல்லிவிடவில்லை. பழைய கதைதான். அதாவது, அப்பட்டமான அராஜகவாதம் என்கிற தத்துவம். அதன் தத்துவ ஞானியாக இலக்கிய உலகில் காட்சியளிக்கிறார் புதுமைப்பித்தன். அவ்வளவுதான். இது புதுமைப்பித்தனுடைய சரக்கல்ல. ஆல்டஸ் ஹக்ஸ்லி, சி. இ. எம். ஜோட், பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் முதலியோரின் சரக்கு அது. 1932-38ல் இந்தச் சரக்குக்கு "மவுஸ்" அதிகமிருந்தது சில அறிவாளிகளிடம்! இன்றைக்கும் கலைச் சுதந்திர சொசைட்டியாரின் மணிக்கொடி இது.

தனிமனிதனின் பலவீனத்தை நினைத்து கூட்டத்தை மனிதன் ஸ்தாபித்தானும்! நினைப்பில்லை. ஸ்தாபிக்க வேண்டும் என்ற தீர்மானமுமில்லை; மனிதனின் இயல்பு அது. சமுதாயமாகத்தான் மனிதன் வாழ்ந்தான், வளர்ந்தான். சமுதாயத்தில் வாழ்வதா, தனிநபராக ஒதுங்கி ஜீவிப்பதா என்கிற கேள்விக்கே இடமில்லை. அப்படிப் பேசுபவர்கள் ஏதாவது மனிதவாசனையற்ற பசுபிக் தீவுக்குச் சென்று தனிநபராக வாழ்ந்து பார்க்கட்டும். அந்தத் தீவில், அந்தத் தனிநபர், தனது சுதந்திரத்தை யாருக்கும் பலியிடாமல் சுயேச்சையாயிருந்து ஒரு கவிதையைப் புனையட்டும், ஒரு ஓவியத்தைத் தீட்டட்டும், ஒரு பாட்டைப் பாடட்டும், ஒரு நாடகத்தை நடத்தட்டும், முன்னேறி வளர ஒரு சிறு முயற்சி செய்யட்டும், பார்க்கலாம். அந்தத் தனிமனிதன் ஒரு ஏவாளையும் தன்னுடன் கூட்டிக்கொண்டு அந்தத் தீவுக்குச் செல்லக்கூடாது. சென்ருல், அந்தப்பாவி ஏவாள் இன்னெரு சமுதாயத்தைச் சிருஷ்டித்துவிடுவாள். புதுமைப்பித்தனைப் போன்ருேரின் கதி அதோகதியாகிவிடும்!

அந்த பசுபிக்தீவு மனிதனின் உள்ளத்திலே கவிதையோ, கலையோ, கலாச்சாரமோ, பெருக்கெடுக்குமா? இல்லை. அந்த மனிதன் உடனே மிருகமாய்விடுவான். இந்த "சிருஷ்டி ரகசியத்தின்" விளைவாகத்தான் என்றுமே மனிதன் சமுதாயமாக வாழ்ந்து, சமுதாயமாக வளர்ந்திருக்கிருன். சமுதாயம் வளரும்போது தனிமனிதனும் வளர்ந்தான். சமுதாயம் தாழ்ந்தபோது தனிமனிதனும் தாழ்ந்தான். சமுதாயம் தாழ்ந்தபோது தனிமனிதன் ஒருவன்மட்டும் வாழ்ந்ததில்லை. ஏனெனில் சமுதாயம் அப்படிப்பட்ட தனி மனிதனைச் சந்தித்ததேயில்லை. சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்து, போராடி, வளர்ந்து இருக்கிறது. இந்தப் போரின் முடிவுதான் பொதுவுடமை. மனிதர்களுக்கு இடையே இயற்கையாக இருக்கும் வித்தியாசங்களைத் தவிர, செயற்கையாகப் பூண்ட, உரிமைகொண்டாடிய, மற்ற வித்தியாசங்கள் அனைத்தும் பொதுவுடமையில் மறைந்தே போகும்.

இதைக் காண மறுக்கிருர்

"உங்கள் கதையை"ச் சொல்ல வந்த புதுமைப்பித்தன்!

அதுமட்டுமல்ல! ஒரு தீர்ப்பே கொடுத்துவிடுகிறார்:—

"சமூகத்தின் அமைப்பு எவ்வித மாக (!) இருந்தாலும் இன்று தாராளமாக விவாதிக்கப்படும் அபேதவாதம், பொதுவுடமை, தனிமனிதத்துவம் சர்வாதிகாரத்துவம் எல்லாம் இந்தப் பிரச்னைக்குப் பதில் அளியா", என்று கூறுகிறார். தீர்ப்பைப் பின்பற்றி மனிதனுக்கு என்ன 'தண்டனை' கொடுக்கிறார்?

"மனிதன் மனிதனாக இருக்கும் வரை, சமூகமும் தனிமனிதனும் இரண்டு வித்தியாசமான மூலைக் கோடியில் நின்றுகொண்டுதான் விவாதித்துக் கொண்டிருப்பார்கள்" என்கிறார்.

மனிதனுக்கு நல்ல காலமோ என்னவோ, அப்படி முடிவற்ற விவாதத்தில் அவன் இறங்கவில்லை! அதுதான் பிரச்னை என்று அவன் நினைக்கவேயில்லையே! அப்படி நினைத்திருந்தால், தனி மனிதனின் சுதந்திரத்தைப்பற்றி சர்ச்சை நடத்திக் கொண்டிருந்தால், தேசீய இயக்கத்தில் மக்கள் ஈடுபட்டிருக்கமாட்டார்கள், நாட்டின் புனர் நிர்மாண வேலையில் அக்கரை காட்டியிருக்கமாட்டார்கள், ஒரு புதிய சமுதாயமான சோஷலிசத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கமாட்டார்கள்.

இந்த விஷயத்தில் சமுதாயம்போகிற போக்கு ஒன்று. புதுமைப்பித்தன் போகிற போக்கு வேறு ஒன்று.

ஆகவே, புதுமைப்பித்தன் தனது தனிநபர் சுதந்திரத்தைப் பேணும் ஒரு 'தனிநபர்'. இந்த உலகத்துக்கெல்லாம் அப்பாற்பட்டவர். அதன் பிரச்சினைகள் எல்லாம் வெறும் சித்தப்பிரமை, அதன் காட்சிகள் எல்லாம் ஒரே குரூபம். அதன் முயற்சிகளெல்லாம் சக்திவிரயம், அதன் முடிவெல்லாம் வெறும் பாழ்! பிரளயம்! அந்தகாரம்! பேரிரைச்சல்! பேய்ச்சிரிப்பு! ஊழிக் கூத்து!

புதுமைப்பித்தனின் தத்துவம்—அதாவது, சமுதாயத்தைப் பார்க்கும் பார்வை—இப்படி. அதாவது, அராஜக வாதப் பார்வை. சமுதாயத்தை, மக்களை மறுத்து ஒட்டு உறவு அறுத்து வெளியேறிய மனிதப் பார்வை! சமுதாயத்துக்கு அப்பால், கால நிலைக்கு எல்லாம் அப்பால், மனித முயற்சிக்கு எல்லாம் அப்பால், மனித அறிவுக்கு எல்லாம் அப்பால், மனித முன்னேற்றத்துக்கு எல்லாம் அப்பால், நின்று கொண்டு ஒரு நிரீஸ்வரனைப் போல் சஞ்சரித்து, சமுதாயத்தின் காட்சிகளைக் காட்டுபவர்.

சமுதாயத்துக்கு அப்பால் நிற்பதால் மனித முயற்சியை அவர் பார்க்க மாட்டார்.

கால நிலைக்கு அப்பால் சூட்சுமமாய் சுயம்புவாய் சஞ்சரிப்பதால் அவர் மனித முயற்சியின் தோல்வியை முன் கூட்டியே யறிந்து வீண் என்று கேலி செய்வார்.

கால நிலைக்கு அப்பால் அவர் வாழ்வதால் சமுதாயத்தின் அழிவை இன்றே எங்கும் காண்கிறார். நிகழ்ந்து கொண்டிருப்

பதும் அழிவு தான், நிகழப் போவதும் அழிவு தான்!

புதுமைப்பித்தன் நோக்குப் படி மனிதன் அழிந்தே போவான்—இன்னும் அழியாதிருந்தால்.

அவன் அழிந்து வருவதைக் காட்டுவது தான் புதுமைப்பித்தனின் இலக்கியம்.

புதுமைப்பித்தனின் தத்துவத்துக்கும் இலக்கியத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதால் தான் இவ்வளவு தூரம் அதைப் பற்றி எழுத நேரிட்டு விட்டது. அதை இன்னும் விஸ்தரிக்க இது சமயமில்லை.

இந்தத் தத்துவத்தை யொட்டித்தான் அவரது நடைமுறையும், மக்கள் உரிமைப் போரைப் பார்த்த பார்வையும்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்பர் ரகுநாதனுக்கு எழுதினர்: "உரிமைக்காகப் போராடச் சொல்லவில்லை. அதில் எனக்கு நம்பிக்கை கிடையாது...சத்திய சோதனை செய்ய எல்லோருக்கும் உரிமை கிடையாது" என்று.

மக்களின் உரிமைப் போராட்டத்தைப் புதுமைப்பித்தன் எப்படிப் பார்த்தார்? அன்பர் ரகுநாதனுக்குச் சொல்கிருர்:—"சென்னை அப்டாயருக்கு (ஆடு வெட்டும் இடம்) போய்ப் பார். பளபள வென்ற கொலைக் கத்தியை ரூல்தடி வைத்துக் கோடு போட்ட மாதிரி இழுத்து வர, தலைகள் உருளும். ஆடுகள் தன் தன் முறை வரும்பொழுது குனிந்து கொடுக்கும். இந்த ஆடுகளில் ஒன்றுதான் என்னுடைய ரகுநாதன் என்று நினைக்க நெஞ்சு கொதிக்கிறது" என்று.

மக்கள், ஆடுகளைப் போல! குனிந்து கொடுப்பதைத்தான் பார்த்தார் புதுமைப்பித்தன். நிமிர்ந்து நின்று சமர் புரிவதையும், தம் வாழ் நாளிலேயே வெற்றி பெற்றதையும், அந்த வெற்றி நோக்கி பீடு நடை போட்டுச் சென்றதையும், புதுமைப்பித்தன் காண மறுத்தார். அவர் பார்வை அப்படி.

எனவே, அவர் இலக்கியம் எப்படி யிருக்கும்? உரிமைப் போரின் எதிரொலிகளை அதிலே நீங்கள் கேட்க முடியாது. மக்களின் வீரத்துக்கும் தியாகத்துக்கும் ஊக்கமளிக்கும் "சபாஷ்" என்ற கைதட்டலைக் கேட்க முடியாது.

ஒரே கேலிச் சிரிப்பின் ஒலி தான் காதில் விழும், ஆடுகள் கத்திக்குத் தலை குனிந்து கொடுக்கிறதைப் பார்த்து!

முதலாளித்துவத்தைச் சீறுகிருர்புதுமைப்பித்தன். உண்மை. சமுதாயக் கேடுகளை சில கதைகளில் வர்ணிக்கிருர் புதுமைப்பித்தன். உண்மை. 'பொன்னகரம்,' 'துன்பக் கேணி,' 'கல்யாணி,' 'தெரு விளக்கு' 'மனிதயந்திரம்' 'இது மிஷின்யுகம்' முதலான கதைகள் சமுதாயத்திலுள்ள குரூர நிலைமைகளை தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவை நமது நெஞ்சில் வேதனையை யுண்டாக்கி, மனச்சாட்சியைத் தூண்டி விடுகிறது. ஆனுல் போட்டோபடம் பிடித்த மாதிரி

இந்தக் காட்சிகளைக் காட்டுவதாலும், இந்தச் சமுதாயக் கேடுகளை எதிர்த்து நடக்கும் மகத்தான இயக்கத்தைச் சித்தரிக்காததாலும் அவை வாசகர்களிடையே நிராசையை யுண்டாக்குகின்றன. சமுதாயச் செயலில் இறங்காதபடி செயலறச் செய்கிறவாறு "கட்டில் பேசுகிறது" என்கிற கதை பேசுகிறது! அக்கதையில் ஒரு சத்தியாக்கிரகியின் உயிர்த் தியாகத்தை மரண தேவதை கேலிசெய்வதுபோல் புதுமைப்பித்தன் சித்திரிக்கிறார். 'புரட்சி மனப்பான்மை' என்கிற கதையில் புரட்சிக்காரர்களை கேலி செய்கிறார் புதுமைப்பித்தன். இப்படியே மனித முயற்சியைக் கேலி செய்யும் கதைகள் பல.

அதனால்தான் சமுதாயக்கேடுகளைச் சித்திரிக்கும் கதைகள் போட்டோபடம்போல் காட்டும் இயற்கைப் பார்வை (Naturalism) கொண்டவை என்கிறோம். சமுதாயத்தின் எந்த நிகழ்ச்சியிலும் மனித நடைமுறையைக் காட்டுவதோடல்லாமல் அதைத் திருத்தும் மனித முயற்சியையும் படம் பிடித்துக் காட்டுவதே விமர்சன ரீதியான யதார்த்த வாதம் (Critical realism) என்கிறோம். அதற்குமேல் போய் சமுதாயச் செயலுக்கு நேரடியாகத் தூண்டும்படியான, சமுதாயத்தில் வளரும் போக்குள்ள சக்திகளை முக்கியப் படுத்தும் இலக்கியத்தை சோஷலிஸ்ட் யதார்த்த வாதம் (Socialist realism) என்கிறோம்.

புதுமைப்பித்தனின் அந்தச் சில கதைகள் இயற்கைவாதத்தின் பாற்பட்டவையே.

ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்தப் பார்வை—இலக்கியத்தில் இந்தப்போக்கு—எழுந்து பயன்படுகிறது. சமுதாயத்தின் கேடுகளைப் பட்டுத்திரையிட்டு மூடி மங்களம் பாடிக்கொண்டிருக்கும் நேரத்தில்—புதுமைப்பித்தன் பாஷையில் "இலக்கியத்தில் காதல் கத்தரிக்காய் பண்ணிக் கொண்டிருக்கும்" நேரத்தில்-அந்தத் தடிப்பேறிய போக்கை எதிர்த்து இயல்பாக, வேறுதத்துவம் இல்லாத நிலையில், எழும் எதிர்வினை இந்த இலக்கியப் போக்கு, புதுமைப்பித்தன் இதற்குப் பிரதிநிதி. ஆனால் இந்தப் போக்கு. ரொம்ப நாளைக்கு நின்றவிடத்திலேயே நிற்க முடியாது. யதார்த்த வாதத்தை நோக்கி முன்னேற வேண்டும்; அல்லது மாயாவாதத்தை நோக்கி, சூனியவாதத்தை நோக்கி, பின் செல்ல வேண்டும். புதுமைப்பித்தனின் 'மனக்குகை ஓவியங்கள்' 'பிரம்ம ராக்ஷஸ்', 'சிற்பியின் நரகம்' 'கோபாலபுரம்', 'சாயங்கால மயக்கம்' போன்ற இன்னும் எத்தனையோ கதைகள் இப்படித்தான் இயற்கைவாதத்திலிருந்து புதுமைப் பித்தனை பின்னுக்கிழுத்துச் சென்றன.

காரணமென்ன? எப்பொழுதுமே குரூர சித்திரங்களைத் தீட்டி நிராசையைப் பரப்பிவந்தால் புதுமைப்பித்தனுக்கே பித்தம் பிடித்துவிடும். ஒன்று அந்

தச் சமுதாயக் கேடுகளை எதிர்த்துப் போராடும் மக்களைச் சித்திரித்து மனஆறுதல் கொள்ள வேண்டும். அல்லது, அந்தக் கேடுகளைப்பற்றி நினைத்து நினைத்து, நெஞ்சுலர்ந்து, சோகம் நிரம்பி, சிந்தனை நொடிந்து, மாய்கையில் தன்னை மறக்க வேண்டும். 'கபாடபுரம்' என்ற கதை சித்திரிக்கும் ஊழிக்கூத்தைப் பாருங்கள், "கொன்ற சிரிப்பு" என்ற கதையில் கலைஞனின் மரணத்தைப் படியுங்கள். 'காளிகோவில்' என்ற கதை சித்திரிக்கும் அந்தகாரத்தைப் பாருங்கள். இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு புதிய தத்துவம் இருந்தால் அதன் ஒளியில் சமுதாயச் செயலின் இரகசியத்தை—அது தான், கண்ணீர்த் துளியின் இரகசியம், மனித சிருஷ்டியின் இரகசியம்—உணர்ந்து அதைப் படம் பிடித்துக் காட்டுமளவிற்கு முதலில் தன்னம்பிக்கை பெற்று பிறகு மக்களிடமும் நம்பிக்கை வைத்து ஒரு கலைஞன் முன்னேற முடியும். புதுமைப் பித்தனுக்கு அப்படி ஒரு புதிய ஒளி இல்லாததால்—புதிய ஒளியையும், எல்லாப் பழைய ஒளிகளையும் மறுத்ததால்—அவர் "கபாடபுரத்தை"க் கற்பனை செய்து பார்க்காமல் வேறென்ன செய்ய முடியும்?

மிகப் பெரும்பான்மையான கதைகளில் அவர் சித்தரிக்கும் காட்சிகளையும், எழுப்பும் ஒலிகளையும் பாருங்கள். அடிக்கடி சொல்லிக்கொள்ளும் மர்ம மந்திரங்களைப்போல சில வார்த்தைகள் விழுந்து கொண்டேயிருக்கின்றன:

எங்கும் நிசப்தம்! அந்தகாரம்! பாழ், பாழ், பாழ்! எக்காளச் சிரிப்பு! பேய்க் சிரிப்பு! இரத்தம் இரத்தம்! பலிபீடம்! வெளி இருள் உள்ளத்தைக் கவ்வுகிறது! கண்ணில் வெறியின் பார்வை! இடிந்த கோயில்! குனிந்த பார்வை! அலைச்சப்தம், பேரலைச் சப்தம், ஒரே அலைச் சப்தம், மரணம்,—

என்றவாறு அமைந்த ஒரு பயங்கரமான மானசீக உலகத்தை நோக்கிப் புதுமைப் பித்தன் சென்று விடுகிறார். அதுதான் அவரது மனக்குகை.

சமுதாயத்தை மறுத்து வெளியேறும் தனிநபரின் உலகம் அது! ஒரு அராஜக வாதியின் பித்த உலகம் அது. சாதாரண மனிதனுக்கெட்டாத கற்பனைகளும், காணாத காட்சிகளும், சிந்திக்காத சிந்தனைகளும் அங்கே பேய்க் கணங்களைப்போல கோர நர்த்தனம் செய்யும்! விபரீத ஆசைகள் தலைவிரித்தாடி பூர்த்தி செய்து கொண்டதாகத் திருப்திப்படும், வேதனைப்படும். "விபரீத ஆசை" என்கிற கதையைப் படித்துப் பாருங்கள்.

அப்புறம்—

"மனிதன் —அவனைப்போல அசட்டுத் தனமான பிரகிருதிகள் கிடையாது. மனிதன் புழு!" என்றும்—

"மனிதன், விதி, தெய்வம்: தள்ளு—வெறும் குப்பை, புழு, கனவுகள்!" என்றும்—

"கோபாலபுரம்" என்ற கதையில் ஜன்னிப் பிதற்றல் கேட்காமலிருக்குமா? அதிலென்ன ஆச்சரியம்?

"ஒவ்வொரு மனிதனிலும் ஒரு பேய் ஒளிந்து கொண்டிருக்கிறது...எவனொருவனைக் கீறினுலும் இரத்தந்தான் வரும், உள்ளிருக்கும் தீமையைக் காண்பிக்கும் சிவப்பு வெளிச்சம் மாதிரி... ..." என்கிருர் புதுமைப்பித்தன் ("கோபாலபுரம்").

ஒவ்வொரு மனிதனிலும் பேயைக் கண்ட புதுமைப்பித்தன், ஒவ்வொரு மனிதனிலும் குறைந்தபட்சம் அதோடுகூட ஒளிந்து வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு தேவனையும் பார்க்கமுடியாமற்போனது ஏன்? அப்படிப் பார்த்தால்தானே மனிதனை முழு மனிதனைகப் பார்த்த மாதிரி! பகவத்கீதையாவது மனிதனைப்பற்றி நம்பிக்கை அளிக்கும் போ லிருக்கிறது. ஆனல் புதுமைப்பித்தனின் கதை மனிதனைப் பேயாகமட்டுமேயன்றே பார்க்கச் சொல்கிறது!

மொத்தத்தில் புதுமைப்பித்தனின் இலக்கியம் இயற்கை வாதத்தில் துவங்கி, பின்பு பின்னேக்கிச்சென்ற ஒரு சீரழிவையே குறிக்கிறது. எல்லாக் கதைகளையும், எல்லாக் கதைப் பாத்திரங்களையும், எல்லாக் காட்சிகளையும் ஒரு அடையாளங் கண்டு பிடிக்கும் அணியில் (Identification Parade) நிறுத்தி அவர்களும், அவையும் சொல்லும் வாக்குமூலத்தைப் பதிவுசெய்து பாருங்கள்.

"கயிற்றரவு" பாமசிவம் பிள்ளை (1945)யின் உலகக் கண்ணேட்டத்தோடு நிறுத்திக் கொள்கிறேன்:

"நான் ஓடினல் காலம் ஓடும். நான் அற்றுல் காலம் அற்றுப் போகும். காலம் ஓடுகிறதா? ஞாயிறு— திங்கள் — செவ்வாய் —நான் இருக்கும் வரை தான் காலமும். அது அற்றுப் போனல் காலமும் அற்றுப் போகும். வெறும் கயிற்றரவு!"

நான், நான், நான் — எப்பொழுதும் இதுவே புதுமைப்பித்தனின் தாரகமந்திரம். அவரது கற்பனைக்கு அச்சாணி இந்த "நான்" தான். இது தான் தனது இலக்கியத்துக்குப் புதுமைப்பித்தன் இட்டுக்கொண்ட—சுழி!

பாரதியைப் பற்றுக்கோடாகக் கொள்ளாமல், ஆல்டஸ் ஹக்ஸ்லியையும், ருஷ்யா மீது அணுகுண்டெறியும்படி அமெரிக்க யுத்த வெறியர்களைத் தூண்டிய "தத்துவஞானி" பெர்ட்ராண்ட் ரஸ்ஸலேயும், பின்பற்றியதால் வந்த வினை! தமிழிலக்கியத்துக்கு எவ்வளவு நஷ்டம்! புதுமைப்பித்தனுக்கிருந்த பிரமிக்கத்தக்க கற்பனைத் திறனுக்கு; அதியற்புதமான பேனு வலிமைக்கு, மேதாவிலாசத்தின் முத்திரை குத்திய ஒரு மகத்தான மக்கள் இலக்கியத்தைச் சிருஷ்டித்திருக்கலாம். அதற்குச் சுழியிட்டு விட்டது அவரது பார்வை.

வீட்டிலும், வாழ்விலும் குரூரமான அனுபவங்களைப் பெற்றதால் மனத்தில் இளவயதிலேயே ஊமைக் காயங்களைத் தாங்கியவர் புதுமைப்பித்தன். உலகப் பொருளாதார நெருக்கடியின் விளைவாக எத்தனையோ மத்தியதரக் குடும்பங்களில் உதித்த படித்த வாலிபர்களுக்கு அன்று (1932-37) ஏற்பட்ட விரக்தி, நிராசை, நம்பிக்கை வரட்சியை புதுமைப்பித்தன் பிரதிநிதித்துவப்படுத்தினர். அதிலிருந்து கரையேறுவதற்கு அவர் முயற்சிக்கவில்லை. மக்கள் இயக்கம் அவரைக் கரையேற்ற முற்பட்டால் "நான், நான்" என்கிற பார்வை குறுக்கிட்டுத் தடுத்து மனக்குகைக்குள் தள்ளி விட்டது.

"அவதாரம்" என்ற கதையில் புதுமைப்பித்தன் வர்ணிக்கிருரே—

"பிறந்தவுடனேயே நஞ்சுக் கொடியை தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு தெரு வழியாகக் கோஷமிட்டுக் கொண்டு வரும் அசாதாரணத் தன்மை பெற்றிருந்த" குழந்தையை பற்றி—

அந்தக் குழந்தை தான் புதுமைப்பித்தன்! தனது தாயாகிய மக்களை விட்டு விலகி நஞ்சுக் கொடியை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடுகிருர்!

பயங்கரம்!

சரஸ்வதி

ஒவ்வொரு ஆங்கில மாதமும்
முதல் தேதியன்று வெளிவருகிறது

சந்தா விவரம்

தனிப்பிரதி 2 அணு

ஆண்டு சந்தா ரூ. 1-8-0.

தனிப்பிரதி வேண்டுவோர் மூன்றணு ஸ்டாம்பு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி

சரஸ்வதி

1, ராஜா அண்ணுமலை செட்டியார் ரோடு,
வேப்பேரி :: சென்னை-7.

தலைவர் லெனின்

எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்பது ஏட்டில் இருக்கும் ஆசை. அதை, மனித இதயத்துக்குள் வேர் ஊன்றச் செய்ய வேண்டும் என்பது புத்த பிரானது ஆவேசம்; அதுவே, ஏசுவின் உபதேசம். மண்ணில் தோன்றிய சாதுக்களும் தீர்க்கதரிசிகளும், இதைப் பூர்த்தி செய்வதற்காகவே, அரும்பாடு பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சி பூரணமாகப் பலித்ததாகத் தெரியவில்லை.



எல்லோரும் இன்புறுவது, இதய மாற்றத்தைப் பொருத்திருக்குமாகில், அது எளிதில் அடையக் கூடிய லக்ஷியம் அல்ல. பல நூற்றாண்டுகள் மட்டுமல்ல, பல யுகங்கள் ஆக வேண்டும். ஆனால், எல்லோரும் இன்புற்று இருப்பதற்கு, இதயமாற்றத்தைத் தவிர, வேறு உபாயம் இல்லையா? நிச்சயமாக உண்டு, இதைத்தான் கார்ல் மார்க்ஸ் என்ற மகா மேதாவி கண்டுபிடித்தார்.

கார்ல் மார்க்ஸ் கண்டு பிடித்த உண்மையும் வெற்று உரையாகப் போயிருக்கலாம். புத்த பிரானின் ஆவேசத்தையும் ஏசுவின் உபதேசத்தையும், சிலர் தானே கைக்கொள்ள முடிந்தது? கார்ல் மார்க்ஸ் கண்ட உண்மையும் பாலைவனத்தில் சோறிப் போகும் ஆற்று நீரைப் போல ஆகிவிடலாம். நல்லவேளையாக, உலகத்தின் க்ஷேமத்துக்காகவும் முற்போக்குக்காகவுமோ என்னமோ, அது அவ்வாறு ஆகவில்லை.

கவியின் உள்ளத்தைக் கொண்டு கார்ல் மார்க்ஸ் கண்ட தரிசனத்தை, கர்ம வீர உள்ளத்தைக் கொண்டு, லெனின் அனுபவத்துக்குக் கொண்டு வந்தார்.

வ. ரா.

எல்லோரும் இன்புற்று இருக்க முடியாது என்று போலி வேதாந்தம் பேசும் வீணர்களின் வாய் அடைத்துப் போகும்படியாக, லெனின் ரஷ்யாவிலே, அற்புதத்தைத் செய்து காண்பித்தார்.

இந்த ஆச்சரிய புருஷன் லெனின். பார்வைக்கு எப்படி இருப்பார்? நல்ல கட்டுமஸ்தான தேகம். உயரமல்ல; குள்ளம். தலையில், முன் வழுக்கை. பிரத்தியேகமான முகப் பொலிவு. சந்தர்ப்பத்தின் நுட்பத்தை நொடிப்பொழுதில் உணர்ந்து கொள்ளும் வல்லமை, அவரிடம் அபரிமிதமாக இருந்தது. ஆபத்தைச் சமாளிக்கும் சமயோசித புத்தியும், அதே ஆபத்தைக் கண்டு அஞ்சாத நெஞ்சமும் லெனினுடைய சிறப்பான குணங்கள்.

உண்மை என்று கண்டதை விடாப் பிடியாகப் பிடித்துக் கொள்ளும் பிடிவாதமும் தவறு என்று கண்டதை உடனே உதறித்தள்ளி, தவறு என்று ஒப்புக் கொள்ளும் தைரியமும் லெனினது உள்ளத்தில் குடி கொண்டிருந்தன.

சிறு பிராய முதல், ரஷ்யாவில் புரட்சி வெற்றிகரமாக முடியும் வரையில், லெனின் அனுபவித்த துன்பங்களும் இன்னல்களும் எழுத்துக்கு அடங்காதவை. துன்பத்துக்கே பிறந்தவர் என்று வாழ நேர்ந்த லெனின், கோடை இடி இடிப்பதைப் போல் சிரிப்பார் என்று சொன்னுல் அது வியக்கத்தக்க விஷயமல்லவா? 'சதிகார' லெனின், இப்படிச் சத்தம் போட்டு, சிரித்தல் கூடுமா? ரஷ்ய ரகசியப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய்விட மாட்டார்களா? ஆனுல், லெனின் எதற்கும் பயப்படுபவர் அல்ல.

ஏழை ரஷ்யர்களின் கதி என்ன? அவர்களுக்கு விமோசனம் உண்டா? அவர்கள் சுகமாயும் சுதந்திரத்தோடும் வாழ வழி உண்டா? இதைப்பற்றித் தான், லெனினுடைய ஓயாத கவலை. இது சம்பந்தமாகத் தான் அவரது தளர்விலாத உழைப்பு. எப்பொழுதும் கவலையிலே இணங்கி இருக்கும் லெனினுக்கு ஊணைப்பற்றியும் உறக்கத்தைப் பற்றியும் நினைவு இருக்குமா?

கார்ல் மார்க்ஸ் கண்ட முடிவை, சாதிப்பது எவ்வாறு? ரஷ்யாவிலே எப்படிப் புரட்சியை உண்டாக்குவது? தமது திட்டத்தை எவ்வாறு பிரசாரம் செய்வது? தம்மை ஆதரிப்பவர்கள் யார் என்று எப்படிக் கண்டு பிடிப்பது? தாம் நடத்தும் இயக்கத்துக்குத் தேவையான பணத்தை எவ்வாறு சேகரிப்பது? ரஷ்யாவை விட்டு வெளியேறிய லெனின், எப்பொழுதும் யோசித்துக் கொண்டிருந்தது இவைகளைப் பற்றித்தான்.

'நம்ம ஜனங்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள். அவர்களை நம்பி எந்தப் பெரிய காரியத்தையும் ஆரம்பிக்கக் கூடாது. அவர்கள் வெறும் நெல்லிக்காய்

மூட்டைகள்' என்று நம் தேசத்தில் இப்பொழுது பலர் சொல்லிக் கொண்டிருக்கிருர்களே, இந்த மாதிரி ரஷ்யாவில் யாரும் சொன்னதே இல்லையா? அதை ஏன் கேட்கிறீர்கள்? லெனின் காலத்து ரஷ்யா, இந்தியாவைவிட ரொம்ப மோசமான நிலைமையில் இருந்தது.

'இம்' என்ருல் சிறை வாசம்; 'ஏன்' என்ருல் வன வாசம். அரசாங்க உளவர்கள் நுழைந்து சின்னு பின்னப்படுத்தி, அலங்கோலம் செய்யாத நாள் இல்லை, நபர் இல்லை, இடம் இல்லை. 'நாம்' நாளைக்கு, சுகமாக வீட்டிலே தான் இருப்போம்' என்ற நம்பிக்கையோடு யாரும் வாழ முடியாது. தூக்குக்கு இரையானவர்கள் அனந்தம். ராஜாங்கத்தைச் சேர்ந்த குலாம்களையோ எண்ணித் தொலையாது. ஜார் என்ற கொடுங்கோலனும் அவனைச் சூழ்ந்து நின்ற பிரபுக்களும் ராணுவ உத்தியோகஸ்தர்களும் ரஷ்யப் பொது மக்களின் வாழ்வை நரகமாக்கி வந்தார்கள்.

இந்த நிலைமையிலிருந்து ரஷ்யாவுக்கு விமோசனத்தைத் தேடிய லெனினும் அவருடைய தோழர்களும் எத்தகைய திடசித்தர்களாக இருக்க வேண்டும்? வார்த்தைகளால் அதை வர்ணிக்க முடியுமா?

பெரு முயற்சியில் ஈடுபடுபவர்கள், விரைவிலே வெற்றியைக் காண முடியுமா? பணத்தாலும் பலத்தாலும் திமிர் பிடித்து நிற்கும் ரராஜாங்கத்தோடு போராடும் லெனினின் தோழர்கள் மனச்சோர்வு அடைய மாட்டார்களா? லெனினைத் தவிர, மற்ற யாவரும் அடிக்கடி மனச்சோர்வுக்கு பலியாஞர்கள். அருமையான தோழர்கள் சோர்வு கொண்டு, பலவீனப்படும் காலையிலும், லெனின் மட்டும் தமது லக்ஷியத்தில் தவறினதில்லை; வழியினின்று மயிர்க்காம்பு அளவு கூட, புரண்டதில்லை. தைரியத்தையும் நம்பிக்கையையும் அணு அளவு கூட, இழந்ததில்லை. என்ன அபூர்வமான பிறவி!

துக்க நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கூட, லெனின், காதலுக்கு, தமது உள்ளத்தில் ஒரு ஸ்தானத்தை ஒதுக்கி வைத்துக் கொண்டார் என்ருல், அவருடைய தவயோகத் திறமையைப் பற்றி என்ன செய்வது என்று தெரியவில்லை.

தம் கக்ஷியினர் சட்டசபைகளுக்குள் பிரவேசிக்க வேண்டும் என்று லெனின் ஒரு சமயம் சொல்லுவார்; அதே லெனின், இன்னெரு சமயம், தம்மைச் சேர்ந்தவர்கள் சட்டசபைகளினின்றும் வெளியேற வேண்டும் என்பார். தங்கள் தலைவர் ஸ்திரபுத்தியில்லாதவரோ என்று கூட, தோழர்கள் சந்தேகங் கொண்டு அவரை விட்டுப் பிரிந்து போயிருக்கிருர்கள். அவர்களுடைய பிரிவைக் கண்டும், லெனின் நெஞ்சம் கலங்கினதில்லை.

லெனினுடைய தோழர்களில்,

ட்ராட்ஸ்கி ஒருவித ஆசாமி; ஸ்டாலின் வேறுவிதப் பேர்வழி. இருவரும் புரட்சிக்குத் தேவை என்பதை லெனின் தான் உணர்ந்தார். முரண்கொண்ட மனப்பான்மைகளையுடைய இவ்விருவரும் தம்மிடம் எல்லையற்ற நம்பிக்கையுடன் இருக்கும்படியாக லெனின் செய்தாரே, அந்த ஜாலவித்தை எப்பேர்ப்பட்டது? அவ்விருவருக்கும் தனித் தனியே, வெவ்வேறு வகையான வேலை கொடுத்து, அவர்களிடமிருந்து வேலை வாங்கின அவரது சாமர்த்தியத்திற்கு இணை காணுவது அரிது.

ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர், லெனின், மூன்று மாத காலம் வேலை செய்தது அசுர வேலையாகும். முப்பது வருஷத்து வேலையை மூன்று மாதத்துக்குள் அவர் செய்து முடித்தார் என்ருல், அதை அற்புதம் என்று சொல்லி, மூக்கின் மேல் கைவைக்க வேண்டியதுதான். மண்ணை வெல்லத்து இனிப்பு வரச் செய்வதைப் போல, சாமான்ய ரஷ்யர்களை லெனின், வீரர்களாக்கினுர். ஏழை என்றும் அடிமை என்றும் யாரும் இல்லை, அந்த நாட்டிலே.

லெனினுக்கு இவ்வளவு அபாரமான சக்தி இருந்ததே, அது அவருக்கு எவ்வாறு கிடைத்தது?

நம் நாட்டுத் திண்ணை தூங்கிகள், லெனின் அவதார புருஷன் என்று, உடனே, காரணமும் சமாதானமும் சொல்லிவிட்டு, கொட்டாவி விடுவார்கள். ரஷ்யாவிலே லெனின் மூலமாக இப்படியெல்லாம் சம்பவிக்க வேண்டும் என்று இருந்ததனுலே அவருக்கு அவ்வளவு சக்தி கிடைத்தது என்று, தலையெழுத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் பிதற்றுவார்கள். ஆனுல் காரணங்கள் வேறு.

லெனினுக்கு, ரஷ்யக் குடியானவர்களிடமும் தொழிலாளிகளிடமும் அபரிமிதமான வாஞ்சை. அவர்களுடைய கூட்டு வல்லமையில், அவருக்கு எல்லையற்ற நம்பிக்கை. எந்த சந்தர்ப்பத்தையும் ஆராயாமல், அவர் நழுவ விட்டதே இல்லை. அந்த ஆராய்ச்சியிலிருந்து தாம் கண்ட உண்மைகளை, பிரயோகம் செய்து பார்த்து, அதனின்றும் படிப்பினை கொள்ளுவதில், அவர் சாமர்த்தியசாலி. அவர் ஓயாமல் உழைத்தார். சலிப்பின்றி உபதேசம் செய்தார். சிறிது சிறிதாக, சக்தியைத் திரட்டினுர். திரட்டின சக்தியை, உருவான வேலையில் புகுத்தினுர். அவ்வாறு செய்து, தமது கட்சியின் எதிர்ப்புவல்லமையை, பன்மடங்கு பெருக்கினுர். சந்தர்ப்பத்துக்குக் காத்துக் கொண்டிருந்து, ரஷ்ய ராஜாங்கத்தை, சிறு சிறு சங்கதிகளில் கலங்கும்படி செய்தார். இவ்வாறு பல ஆண்டுகள் செய்து, புரட்சிக்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் ஒன்று சேர்த்தார். எனவே. லெனினது வல்லமை, அவரது உழைப்பின் பயன்; அவரது மதியூகத்தின்

விளைவு; அது சந்தர்ப்பத்தின் சன்மானம்; அதுவே அவருடைய எதிரிகளின் பலவீனத்தையும் பொறுத்திருந்தது.

யாரோ ஒரு முட்டாள், லெனினைச் சுட்டான். சுட்ட குண்டு, அவரது தோள்பட்டைக்குப் பக்கத்தில் சில வருஷங்கள் இருந்தது. அதை வெளியே எடுத்தால், லெனினது உயிருக்கு அபாயம் என்று டாக்டர் எடுக்கவில்லை. அந்தக் குண்டோடு, லெனின் சில வருஷங்கள் உயிரோடு இருந்தார். அப்பொழுதும் அவரது உழைப்பு ஓய்ந்ததில்லை.

சகோதர மனிதனிடம் வாஞ்சை என்றால், லெனினைப்போல அல்லவா இருக்கவேண்டும்? பொய்யையும் வஞ்சகத்தையும் பட்டினியையும் நோயையும் ரஷ்யாவில் தலைகாட்டாமல் செய்ய எண்ணி, அதற்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த லெனின், சாகா வரம் பெற்றவர். உலக சரித்திரத்திலே அவருக்கு இணையாக, யாரையாவது சொல்லக்கூடுமானால்,அவர் காந்தி;இருவருடைய தன்மைகளும் ஒரே வகை. லட்சியமும் ஒன்றே. ஆனால், அதை அடையும் மார்க்கங்கள் மட்டும் வெவ்வேறு. இவர்கள் இருவரும் மனித வர்க்கத்தின் 'ஈடு ஜோடி' இல்லாத சிகரங்கள்.

—'சக்தி' 1-2-1944

O

காலை மேகங்கள்

முன் ஒரு காலத்தில் ஒரு கடலில் ஒரு 'மச்சகன்னிகை' இருந்தாள். ஒவ்வொரு நாள் காலையும் சூரியோதயத்திற்கு முன் அவள் கடலிலிருந்து வெளிவந்து, பக்கத்திலுள்ள மலையுச்சியில் ஏறி உட்கார்ந்துகொண்டு சூரிய உதயத்திற்காகக் காத்துக்கொண்டிருப்பாள். ஆனால் அதிகாலையிலேயே எழுந்திருந்து உதயம் வரை அவள்தனது நேரத்தை அனாவசியமாக வீணாக்குகிறாள் என்று அவளுடைய தமக்கை நினைத்தாள்.

மச்சகன்னிகையோ வெண் மேகங்களையும், பனி மண்டலங்களையும் பிடித்துவைத்துப் பின்னிக்கொண்டிருந்தாள். தன் வீட்டு வேலைகளை எப்படி அமைதியாகவும் சந்தோஷமாகவும் கவனிப்பாளோ அப்படியே வேலையிலீடுபட்டிருந்தாள். சூரியன், உதயமானதுமே முதல் வேலையாக தனது ஒளிக்கிரணங்களை அந்தக் கடலின்மீதுதான் பாய்ச்சினான். அந்த ஒளிக்கிரணங்கள் மச்சகன்னிகை பின்னிக்கொண்டிருந்த மேக மண்டலத்தில் பட்டதுமே வர்ண ஜாலங்களும் நிறைந்த வானவில்லைப்போல் அது ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்தது.

—சீன நீதிக் கதை

சிறுகதை

மகனும் மகளும்

பண்டரிநாதன்

கடைசியில், எதிர் பார்த்துக் கொண்டிருந்த அந்த சம்பவம் நடந்துவிட்டது. அவருடைய மூச்சு நின்றதுதான் தாமதம், சுற்றியிருந்தவர்கள் வாய் பிளந்து, பெரிய ஓசை எழுப்பி, அழத் தொடங்கினர்.

அவர்களோடு சேர்ந்து நானும் அழுதேன், அலறினேன், களைப்படைந்து ஓய்ந்தேன்.

மாலையிட்டு மணந்து மகிழச் செய்த என் கணவர் பிணமாகி விட்டார். இனி என்னுடன் அவர் பேசமாட்டார், சிரிக்கமாட்டார், சினந்து சீறமாட்டார், கோபம் தாங்கமுடியாத நேரத்தில் அடிப்பதற்காக ஓடி வர மாட்டார்.

ஒளி இழந்த கண்களோடு, ஓசை இல்லாத இதயத்தோடு பிணமாகப் படுத்திருக்கும் அவரைப் பார்த்தேன்.

என் கண்களில் சூடான கண்ணீர் பொங்கிப் பெருகி வழிந்தது. ஆனால், என் இதயத்தின் ஜீவ ஊற்று வற்றிக் கொண்டிருந்தது.

இனி, நினைத்துப் பயன் என்ன? அவர் திரும்பி வரப் போவதில்லை.

ஆனால், அவருடன் நான் நடத்திய நாற்பது வருஷ குடும்ப வாழ்வை என் உள்ளத்திலிருந்து நீக்கிவிட முடியுமா?

அது என் கண்முன் வந்து நின்றது.

பத்து வயதுச் சிறுமியாக இருந்தபோது, திருமணப் பூப் பந்தலில் அவர் கையைப் பற்றினேன். அடைக்கலம் தந்த அருள் நெஞ்சுடன், ஆதரவு காட்டிய அன்புக் கரத்துடன் பிணைக்கப்பட்ட என் புதுவாழ்வு ஆரம்பமானது. ஆரம்பத்தில், உலகம் தெரியாத, உறவு புரியாத சிறுமியாக இருந்த வேளையில் அவருடன் எத்தனை தடவை சண்டை போட்டிருக்கிறேன். அதை நினைத்துப் பார்த்தால், இந்த நேரத்தில்கூட, சிரிப்பு பொங்கிக்கொண்டு வருகிறது. பதினெட்டாவது வயதில் என் வாழ்வில் ஒரு பெரும் மாற்றம், நினைக்க நினைக்க இன்பம் தரும் நிகழ்ச்சி நடந்தது. ஆம், அப்பொழுதுதான் நான் பெண்மையின் பூரணப் பொலிவான தாய்மையை அடைந்தேன். நான் மட்டுமா, அவரும் எவ்வளவு சந்தோஷப்பட்டார்? இரவில், எல்லோரும் தூங்கிய பிறகு, தனியாக, என் காதுடன் தன் வாயை ஒட்டவைத்து, மகிழ்ச்சி பொங்

கும் குரலில் அவர் என்னிடம் கேட்ட கேள்விகள், நடத்திய வாக்குவாதம், இழுத்த வம்புச் சண்டை, அம்மம்மா–ஒன்ரு இரண்டா, ஓராயிரம் இருக்கும்! ஆனால், அந்த ஆனந்தம் நிலைக்கவில்லை. பிறந்த முதல் குழந்தை, பிரசவ அறையிலே இறந்துவிட்டது என்று கேள்விப் பட்டவுடன் அவர் அழுத அழுகை, தாயான என்னையும் மிஞ்சிவிட்டார். பிறகு கோபு. அவனுக்குப்பின் பிறந்த இரண்டும் தங்கவில்லை. கடைசியாகப் பிறந்தவள்தான் இந்து.

நாற்பது வருஷங்கள்—நம்ப முடியவில்லை. அத்தனை ஆண்டுகளும் எங்கே போய்விட்டன?

மறுபடியும், திடீரென்று, கோடை இடி மாதிரி கிளம்பிய அழுகைப் பெருஞ் சத்தத்தில் என் சிந்தனை அமிழ்ந்துவிட்டது.

என் மகன் அழுதான். மகள் அழுதாள். மருமகளும், மருமகனும் அழுதனர். பேரப்பிள்ளைகள் அழுதன. கூடியிருந்தவர்கள் அழுதனர். இறந்த என் கணவருக்காக அழுதனர். இருக்கும் எனக்காகவும் அழுதனர்.

சிலமணி நேரத்திற்குள், மிஞ்சிப் போனால் சில நாட்களுக்குள் அவர்கள் அனைவரும் நடந்ததை மறந்துவிடுவார்கள். ஆனால், என் கவலை—அது நீங்குமா? என் கண்ணீர்–அது நிற்குமா? என் அழுகை அது ஓயுமா?

* * *

பத்து நாட்கள் பறந்தோடிப் போய்விட்டன. வழக்கம்போல் எல்லாம் நடந்து முடிந்தது. தாலி, பூ, மஞ்சள், குங்குமம்—அவருடன், அவைகளும் என்னிடமிருந்து பிரிந்துவிட்டன.

உம்... அதை எண்ணி கவலைப்படுவதில், கண்ணீர் வடிப்பதில், பெருமூச்சு விடுவதில் என்ன பலன் இருக்கப்போகிறது? அதிலும், நான் என்ன இளம்பெண்ணு, அதையெல்லாம் ஆசையுடன் அனுபவித்து மகிழ்வதற்கு?

இனி என் ஒரே கவலை. எஞ்சியிருக்கும் நாட்களை எப்படி ஓட்டுவது என்பதுதான். என் எதிர்காலத்தை யாரிடம் நம்பி ஒப்படைப்பது?

மகனிடமா, மகளிடமா? நான் இருக்கவேண்டிய இடம் எங்கே? கோபுவின் வீட்டிலா, இந்துவின் இல்லத்திலா?

கோபுவின் வீடுதானே எனக்கு நியாயமான புகலிடம். பத்து மாதம் சுமந்து பெற்றவளுக்கு, ரத்தத்தைப் பாலாக்கிக் கொடுத்தவளுக்கு, கண்ணிமையாக இருந்து கவனித்துக் காத்து வளர்த்தவளுக்கு அவன் தன் வீட்டின் ஒரு மூலையை ஒதுக்கித் தரமாட்டானு?

அவனை நாடாமல், இந்துவின் வீடு தேடிச் சென்ருல்? அவளையும் நான்தான் பெற்றேன். இருந்தாலும் அவள் பெண்தானே!

மகன்! வயதான காலத்தில் பெற்றவர்களுக்கு அவன்தானே பெருந்துணை. இனிய, குளிர்ந்த நிழல். அதை எண்ணித்தானே,

பெறுபவள் பெண்ணுகயிருந்தாலும், பிறக்கப்போவது ஆணுக அமையவேண்டும் என்று ஆசைப்படுவது, தவங்கிடப்பது.

மகள்! அவளும் ஆதரவு காட்டுவாள். ஆனுல் அவள் தூரத்துப்பச்சை. பிறர் வீட்டுச் சொத்து, பிறந்தது பெண் என்று தெரிந்தவுடன் பூரண சந்தோஷம் ஏற்படாததற்கு காரணம் அதுதானே.

பெண், நிலவு; ஆண், சூரியன். அப்படித்தானே உலக வழக்கு இருந்துவருகிறது.

"அம்மா" என்ற இந்துவின் குரல், என் எண்ணத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்தியது

அவளைப்பார்த்தேன். என்ன? முகத்திலே உருள முத்துப் போன்ற கண்ணீர்த்துளி அவள் விழிக்கோணத்தில் காத்திருக்க வேண்டியதின் அவசியம் என்ன?

"அம்மா" என்று அவள் மறுபடியும் கூப்பிட்டாள்.

"என்ன இந்து ?"

அவள் என் அருகில் அமர்ந்தாள். அவள் முகத்தைக் கவனித்துப் பார்த்தேன். உணர்ச்சியைக் கட்டுப்படுத்த அவள் கஷ்டப்பட்டாள், முடியவில்லை. மறுவினடி, என் மடியில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழவாரம்பித்தாள்.

"இந்து" மெல்லக் கூப்பிட்டேன் நான்.

அவள் அழுகை அடங்காது பெருகிக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்குப் பின், மெதுவாக அவள் தலையைத் தூக்கி நிறுத்தி வைத்தேன். அவள் தன் முகத்தை என் முகத்துடன் இணைத்துக்கொண்டாள்.

"இந்து, என்ன விஷயம்?"

அவள் உதடுகள் நடுங்கின.

"இந்து".

அவள் என் முகத்தை நேராகப் பார்த்தாள். "அம்மா"' கடைசியில் பேசிவிட்டாள்.

"சொல்லேன் இந்து".

"சொன்னுல் கேட்பாயா"?

"என்ன விஷயம்"?

அவள் தயங்கினுள்.

"இந்து"

,'அம்மா, என்னுடன்...என்னுடன் வந்துவிடு."

"இந்து?,'

"உண்மைதான் அம்மா. என் வீட்டில், நான் இடம் தருகிறேன், நீ வந்துவிடு." அவள் ஆத்திரத்துடன் பேசினுள்.

அவளுடைய அந்தப் பேச்சின்காரணத்தை, அவசியத்தை, நியாயத்தைப் புரிந்துகொள்ள முடியாமல் நான் திணறினேன். "கோபு..." அதற்குமேல் என்ன பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை.

இந்து என்னைப் பார்த்தாள், சிரித்தாள். அது கேலிச் சிரிப்பு "மகன் இருக்கும்போது மகள் வீட்டிலா தங்குவது? அம்மா, அப்படித்தானே நீ நினைக்கிருய்"? அவள் கேட்டேவிட்டாள்.

நான் என்ன பதில் சொல்லுவது?

அவள் மறுபடியும் பேசினுள். "அம்மா, நீ அண்ணனிடம் காட்டிய அன்பை எனக்கு அளித்ததில்லை."

என் இதயத்தை அவள் பேச்சு பிளப்பதுபோலிருந்தது. இருந்தாலும், அவளை எதிர்த்துப்பேச, அவள் வாயை அடக்க எனக்கு துணிவு வரவில்லை.

"மகள், கல்யாணத்தோடு சரி-மகன்தான் கடைசிவரையில் காப்பாற்றுவான். அப்படித்தானே அம்மா நீ எண்ணியிருந்தாய்".

"இந்து"

"அம்மா, நீ அண்ணுவின் வீட்டில், அவனுடைய தாயாக இருக்க இடம் கொடுத்திருந்தால், நான் தடுக்கமாட்டேன். ஆனால்..."

"என்ன இந்து?"

"அண்ணியின் திட்டம் என்ன தெரியுமா? நீ வந்தால் வேலைக்காரிக்குக் கொடுக்கும் பணம் மிச்சமாகும். அம்மா, நீ இந்த வயதில், மறுபடியும் வேலை செய்ய வேண்டுமா?"

என்ன-கோபுவா, என் மகனு, இப்படி நடந்துகொண்டிருக்கிறுன். வேலை செய்தால்தானு அவன் வீட்டில் இடம் கிடைக்கும்?

"அம்மா நீ என்னுடன் வந்துவிடு."

"இந்து, உன் கணவன்..."

"ஏன், அவருக்கு இருக்கும் உரிமை, எனக்குமாத்திரம் இல்லையா? அவருடைய அம்மா மாத்திரம் இருக்கலாம், அதே வீட்டில் உனக்கு ஒரு சின்ன இடம் கிடைக்காதா?',

"என்ன இருந்தாலும் இந்து ......"

"நீ இப்பொழுது வரப்போகிருயா, இல்லையா?"

அவளுக்கு என்ன பதில் தருவது? மகன்தான் காப்பாற்றுவான், மகள் கண்ணீர் வடிப்பதோடு நின்றுவிடுவாள் என்று எதிர்பார்த்தேன்.

பெற்றபோது, வளர்த்தநேரத்தில், கல்யாணம் செய்து தந்த வேளையில், நான், இந்துவை—என்பெண்ணை-கண்ணுக எண்ணவில்லை, கடனுகக் கருதினேன்.

ஆனல் இப்பொழுது?

"அம்மா?"

"இந்து."

நெஞ்சிலிருந்து வெடித்துக்கொண்டு கிளம்பியது அழுகை. நான் என் மகளின் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதேன். ○



* புதுமைக் கலைஞர் முகவை இராஜமாணிக்கம் அவர்கள், **மாலைப் பொழுதினிலே** என்ற தலைப்பின் கீழ் இலக்கியத்தில் தான் ரசித்துச் சுவைத்து மகிழ்வதை எழுதுவதாக இசைந்துள்ளார். இந்தத் தலைப்பையே, தனது இந்தத் தொடக்கக் கட்டுரைக்கும் தலைப்பாக வைத்து, மாலைப் பொழுதைக் கருப் பொருளாகக்கொண்டு எப்படி எப்படி எல்லாம், நமது அருந் தமிழ்ப் புலவர்கள், கவிதையிலே வடித்தெடுக்கிறார்கள் என்பதை அழகுபட எடுத்துக் காட்டுகிறார்.

மாலைப் பொழுதினிலே

முகவை இராஜமாணிக்கம்

ஆஹா! மாலைப்பொழுது என்று சொன்னாலே மயக்கம் உண்டாகிறது, மகிழ்ச்சியால்! மனம் பூரிக்கிறது, எழுச்சியால்! அதனால்தான், "சாந்திமயமான சாயங்கால வேளையிலே, நீலக் கடலையும் பாற்கடலாக்கும் நிலாவொளியிலே, கடற்கரை வெண் மணற் பரப்பிலே கற்பனா கர்வத்தோடும், சிருஷ்டி உற்சாகத்தோடும், கவி, தனது கம்பீரமான குரலிற் பாடியதைக் கேட்டவர்கள்தாம், கவியின் உள்ளத்தை உள்ளவாறு உணர முடியும்" என்று, கவிக்கு உணர்ச்சியூட்டும் நேரம் மாலை வேளை என்கிறான், புதுமைக்கவி பாரதி!

நாலு நிலத்திலும் - குறிஞ்சி (மலையும் மலை சார்ந்த இடமும்), முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்), மருதம் (வயலும், வயல்

சார்ந்த இடமும்), நெய்தல் (கடலும் கடல்சார்ந்தஇடமும்)-மாலை நேரத்தில் தோன்றும் வண்ண வண்ணக் காட்சி, மனோகரம் நிறைந்தது; மாலை நேரத்தில் மெல்லென வீசும் மந்தமாருதம், மனோரம்மியம் கலந்தது; மாலை நேரத்தில், அருவியும், பறவையும், தும்பியும், தென்றலும் எழுப்பும் இன்னொலி, இதயத்தைக் குளிர்விப்பது.

பூஞ்சோலை மலரும்; புள்ளினம் பாடும்; மயில் ஆடும்; குயில் கூவும்; கிளி மிழற்றும்; தும்பி ஊதும்; வண்டு ரீங்காரமிடும்; தென்றல் சுதி கூட்டும்; எங்கும் இசையொலி முழங்கும். இவையெல்லாம் நிகழ்வது மாலைப் பொழுதினிலேதான்! கவிஞர் நாடுவதும் மாலை. காதலர் கூடுவதும் மாலை. மல்லிகை மலர்வதும் மாலை. மதி தோன்றுவதும் மாலை. வெப்பம் தணிவதும் மாலை. வேட்கை மிகுவதும் மாலை. தென்றல் வீசுவதும் மாலை. சிந்தித்து மகிழ்வதும் மாலை!

மாலைப் பொழுதென்றால் கவிகளுக்குக் களிப்புத்தான். கற்பனை வல்லுணர்களுக்கு எக்காளந்தான். உத்தமப் புலவர்களுக்கு உயிர் மூச்சுத்தான். கலைஞர்களுக்குக் களியாட்டந்தான். காதலர்களுக்குக் கொண்டாட்டந்தான். காதலற்றிருக்க நினைப்பவர்களுக்கு சாந்தி தவழும் வேளை தான். குழந்தைகளுக்கோ – கேட்கவா வேண்டும்!

காலை எழுந்தவுடன் படி. பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டைப் பாடு. ஆனால் மாலை முழுவதையும் விளையாட்டுக்கு ஒதுக்கிவிடு. இதை வழக்கப் படுத்திக்கொள்ளச் சொல்கிறார்– பாப்பாவை, நமது பாவாணர் பாரதியார்!

காலை எழுந்தவுடன் படிப்பு–பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு–
என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.

மாலைப்பொழுதை – விளையாட்டிலும், களியாட்டத்திலும், வேடிக்கையிலும். பொழுது போக்கிலும் கழிக்கச் சொல்கிறார் – பாப்பாக்களை, பாப்பா உள்ளம் படைத்த பாரதி!

பாரதியாரின் வள்ளி, வல்லவேல் முருகனிடம், கிளியைத் தூது அனுப்புகிற நேரமும் மாலைதான்.

அல்லிக் குளத்தருகே–ஒருநாள்
அந்திப் பொழுதினிலே
முல்லைச் செடியதன்பாற் – செய்தவினை
முற்றும் மறந்திடக் கற்றதென்னே
யென்று
சொல்ல வல்லாயோ கிளியே!...

அல்லிக்குளம். அதன் அருகே முல்லைச்செடி. ஒருநாள். அந்திப்பொழுது. முருகனும் வள்ளியும் சந்தித்துக் கலந்த நேரம். அதை அவனுக்கு நினைவூட்டிவிட்டு வரச் சொல்லுகிறாள் வள்ளி, தன் கிளியிடம்.

கலைமகள்மீது, தான் கொண்ட காதலைப் பற்றிப் பாடுகிறான் கவியமுதப் பாரதி. தென்றல் வீசும் தருணத்தில் சந்திக்கிறான்–தீஞ்சுவைக்கவி பாடும் திறனை அளிக்கவல்ல தேவியை. மாலைப்

பொழுதில், கலைமகளின் கடாட்சம் பெற்ற விதத்தைக் கன்னித் தமிழ்ப்பாவில், பாரதி வடித்துக் காட்டுவதைப் பாருங்கள்.

ஆற்றங் கரைதனிலே - தனி
யானதோர் மண்டப மீதினிலே,
தென்றற்
காற்றை நுகர்ந்திருந்தேன் - அங்கு
கன்னிக் கவிதை கொணர்ந்து
தந்தாள் - அதை
ஏற்று மனமகிழ்ந்தே - "அடி
என்னே டிணங்கி மணம் புரிவாய்"
என்று
போற்றிய போதினிலே - இளம்
புன்னகை பூத்து மறைந்துவிட்
டாள், அம்மா!

மாலை வேளையிலே, கலைத் தேவியைக் கண்டு, மணந்து, கலந்து, கவிதை உள்ளம் கொண்டு களிப்பெய்திய காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறான் – செந்தமிழோவியச் சித்திரக் கவிஞன்.

அந்திப் பொழுதென்றாலே, பாரதிக்குக் கொண்டாட்டந்தான். கண்ணுக்கினிய கருநிறக் காக்கை காவென்று கத்துமாம். கிளைமீதில் தாவுமாம். கூவித் திரியுமாம். கூட்டங்கள் கூடித் திசைதோறும் போகுமாம். இதெல்லாம், விண்மீது அந்திப் பொழுது வந்தவுடன் நடக்கிறது. அப்பொழுது விண்ணிலே செவ்வொளியைக் காட்டி, பிறையைத் தலையில் சூடிக்கொள்ளுகிறாளாம் - பராசக்தி! அதுமட்டுமா?

தென்னை மரக்கிளையில், செல்வப் பசுங்கிளி கீச்சிட்டுப் பாயுதாம். சின்னக் குருவி, 'ஜிவ்' வென்று வானத்திலே ஊசலிட்டுப் போகுதாம். பருந்து, மெல்ல வட்ட மிட்டுவிட்டு, நெடுந் தொலை ஏகுதாம். தெருவிலே சேவல், 'சக்திவேல்' என்று கூவுதாம்.

மாலைப்பொழுதிலே - காக்கை, கிளி, குருவி, பருந்து, சேவல் பரிவாரங்களுடனே, பராசக்தி துணையோடு, தனது காதலியைச் சந்திக்கத் தயாராகிறான் கவிஞன். செவ்வொளி வானிலே மறைந்தது. இளம் தேநிலவு எங்கும் பொழிந்தது. அவள் வந்தாள். உச்சி மாடத்தின்மீது ஏறி வந்தாள். கொவ்வை இதழ் நகை வீசி வந்தாள். விழிக் கோண உச்சியினால் நிலவைப் பிடித்தாள். யார்? செம்மையுடையாள்! பெண்மை நிறைந்தாள்! அவள் காதல் செம்மையுடையது! செம்மையுடையது! செம்மையுடையது! அந்தக் காதலினால் உயிர் தோன்றும். காதலினால் உயிர் வீரத்தில் ஏறும். காதலினால் அறிவு எய்தும். காதல் இங்கு கவிதைப் பயிரை வளர்க்கும்.

அதனால் என்ன செய்தான் அந்த அற்புதக் கவிஞன்?

ஆதலினலவன் கையைப்—பற்றி
அற்புத மென்றிரு கண்ணிடை யொற்றி
வேதனையின்றி இருந்தேன்—அவள்
வீணைக் குரலிலோர் பாட்டிசைத் திட்
டாள்.

மாலைக் காட்சியும், காதலியின் மாட்சியும் சேர்ந்து கவிஞன் உள்ளத்திலே, இறவா உண்மைகளைத் தோற்றுவிக்கின்றது.

பாரதி கூறும் கருத்தைப் பாருங்கள்.

கோலமிட்டு, விளக்கினை ஏற்றி, பராசக்தி முன்னே கூடி நின்று, ஓலமிட்டுப் புகழ்ச்சிகள் சொல்லும், வையத்துமாக்கள், உண்மை கண்டிலர். ஞாலமுற்றும் பராசக்தி தோற்றம் என்பதை விண்டிலர் — என்று சொல்லி விட்டு, நம்மை என்ன செய்யச் சொல்கிறான் பாரதி?

காதல் என்பதோர் கோயிலின் கண்ணே
ஞானம் என்ற விளக்கினை யேற்றிக்
காலமுற்றும் தொழுதிடல் வேண்டும்—

என்கிறான்.

மாலைப் பொழுதிலே ஞான விளக்கை ஏற்றி, காதல் கோயிலிலே 'கால முழுவதும் தொழுதிடல் வேண்டும், இந்த ஞாலம் செழிக்க என்ற உண்மையை நவின்றிருக்கும் நல்ல தமிழ்ப் புலவனின் நேர்த்தியைப் பாருங்கள்.

காதல் கோயில் பூசாரியாகி விட்ட கவிஞன், காதலியின் தரிசனத்துக்குக் காத்திருந்தால் அதில் ஆச்சரியமுண்டோ?

காதலியின் திவ்விய தரிசனத்துக்கு ஏற்ற நேரம் மாலைப் பொழுது தானே! அத்தகைய மாலைப் பொழுதிலே, ஒரு மாடி மீது அமர்ந்திருந்தான் கவிஞன், வானையும், கடலையும் நோக்கியிருந்தான். வானும், கடலும் தெவிட்டாத சித்திரக் காட்சியல்லவா! என்ன கண்டான்?

மூலைக் கடலை, வான வளையம் முத்தமிட்டுத் தழுவி முகிழ்த்ததைக் கண்டான். நீல நெருக்கிடையில் நெஞ்சைப் பறிகொடுத்தான்; நேரம் போகிறதே என்ற நினைப்பும் மறந்தான்; தன்னையும் மறந்தான்; சிறந்த பலப்பல நல்ல பகற்கனவில் லயித்திருந்தான். அந்த நேரத்திலே, அவனுக்குப் பின்புறமாக ஒரு ஆள் வந்தது. நின்றது. அவன் கண்ணை மறைத்தது. யார் என்று அறிய முயன்றான்.

பாங்கினிற் கையிரண்டும் தீண்டியறிந்
தேன்
பட்டுடை வீசுகமழ் தன்னிலறிந்தேன்
ஓங்கி வரும் உவகையூற்றி லறிந்தேன்
ஒட்டும் இரண்டுளத்தின் தட்டிலறிந்
தேன்
'வாங்கிவிடடி கையை ஏடி கண்ணம்மா!
மாயம் எவரிடத்தில்?' என்று மொழிந்
தான். அப்புறம்?—

சிரித்த ஒலியில் அவள் கையை விலக்கித் திருமித்தழுவி, 'என்ன செய்தி சொல்'? என்றான். கேள்விகளை அடுக்கினான்.

நெரித்த திரைக்கடலில் என்ன கண்டிட்
டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
திரித்த நுரையினிடை என்ன கண்டிட்
டாய்?
சின்னக்குமிழிகளில் என்ன கண்டிட்டாய்?

பிரித்துப் பிரித்து, தினந்தினம் மேகம் அளந்து பெற்ற நலங்கள் தானென்ன? பேச மாட்டாய்?—என்றான்.

கவிஞனின் காதலி சொன்ன பதில் என்ன? வேறு என்ன சொல்வாள்? காதலன் தவிர அவளுக்கு வேறு காட்சியுண்டோ!

நெரித்த திரைக்கடலில் நின்முகங் கண்டேன்;
நீல விசும்பினிடை நின்முகங் கண்டேன்;
திரித்த நுரையினிடை நின்முகங் கண்டேன்;
சின்னக் குமிழிகளில் நின்முகங் கண்டேன்;
பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே
பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை;
சிரித்த ஒலியினிலுன் கைவிலக்கியே
திருமித் தழுவியதில் நின்முகங் கண்டேன் - என்றாள்.

நாணிக் கண் புதைத்தல் என்ற பழந் தமிழ்க் காதல் இலக்கியப் பாணியில், பின்னே வந்து நின்று கண் மறைத்தல் என்ற பொருளை எடுத்துக் கொண்டு, சிங்கார ரசம் சொட்டச் சொட்ட 'கண்ணம்மா என் காதலி' என்ற பாட்டை, மாலைப் பொழுதின் மயக்கத்திலே பாடியிருக்கும் பான்மையை நினைக்குந்தோறும் மாலைப் பொழுதின் அருமை, மனதைக் குளிர்வித்து மகிழ்ச்சிக் கடலில் மிதக்க விடுகிறது.

இந்த மாலைப் பொழுது, வள்ளுவனையும் விடவில்லை. காதல் நோய், வள்ளுவனுக்கு விதி விலக்காக இருக்க முடியுமா? இல்லாவிட்டால், வான் புகழ் கொண்ட கவியாக வள்ளுவன் ஆக முடியுமா? காதலை நோய் என்று ஏன் சொன்னான், வள்ளுவன்? உடலையும், உள்ளத்தையும் நோய் பீடிப்பது போல, காதலும், உடலையும், உள்ளத்தையும் அரிப்பதாகும். ஆனால் இந்த நோய் அபாயகரமானதல்ல; ஆளைக் கொல்வதல்ல; ஆபத்து விளைவிப்பதல்ல. உடலைச் சிலிர்க்க வைத்து, உள்ளத்தில் உணர்ச்சியைப் பெருக்க வைத்து, ஒரு விதமான இன்பத்தைத் தர வல்ல விநோதமான நோய் இந்த நோய். அதனால் தான், இதை இன்னோய் என்றார், வள்ளுவப் பெருந்தகை. இனிமையான நோயை எவரும் வெறுப்பரா? எவரும் விரும்புவர்.

இந்த இனிமை நோய் மலர்ந்து மணம் பரப்புவது எப்பொழுது? மாலைப் பொழுதில்! காதல் என்ற இனிமை நோய்—நாள் முழுதும் காதலர்களைப் பீடித்துத் தான் நிற்கிறது. ஆயினும் ஒவ்வொரு பொழுதிலும் ஒவ்வொருபடி இருக்கிறது என்கிறான் வள்ளுவன் — காதல் நோய்க்கு. காலையிலே அரும்புமாம். பகலெல்லாம் மொட்டாகி வளருமாம். மாலையிலே முழுதும் மலர்ந்து, மணம் பரப்பி, மகிழ்ச்சிக் கடலிலே நீந்தி விளையாட வைக்குமாம். முழுக் காதலின்பம் நுகர்ந்து களிக்கும் நேரம் மாலைப் பொழுது என்று, முத்திரை வைக்கிறான், பாரதிக்கு முன்னோடியான வள்ளுவப் பெரும்புலவன்.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இன்னோய்.

ஆனால், வள்ளுவனையும், பாரதியையும் போல, மாலைப் பொழுதெல்லாம், மகிழ்ச்சிப் பொழுதென்று மட்டும் பார்க்கத் துணிந்தானில்லை, சிலம்பை

இசைத்த சித்திரப் புலவர் கோமான்-இளங்கோ அடிகள்.

இணைந்த காதலர்களுக்கு மாலைப் பொழுது இனிக்கும். பிரிந்த காதலர்களுக்கு, மாலைப் பொழுது மகிழ்ச்சியா தரும்? தென்றலையா அள்ளி வந்து தரும்? வெப்பக் காற்றையல்லவா விசிறியடிக்கும்! மணம் பரப்பும் மலராகவா இருக்கும்? கருகிய மலராகவல்லவா இருக்கும்!

இளங்கோவடிகள் கண்ட மாலைப் பொழுது — வானிலே ஊர்ந்து செல்லும் சந்திரன், குளிர்ந்த கதிர்களைப் பரப்பிக் கொண்டிருக்கும் பொழுது. அரும்பி, மொட்டாகி வளர்ந்த பூ மலர்த்து கொண்டிருக்கும் பொழுது. அத்தகைய மாலைப் பொழுதிலே, கண்ணகியும், மாதவியும் என்ன நிலையில் இருந்தார்கள், எத்தகைய உணர்ச்சிகளை அனுபவித்தார்கள் என்பதை, ஒரு வெண்பாவிற் கூறும் நயத்தைப் பாருங்கள்.

கணவனைப் பிரிந்து, தனித்திருந்து பாடுகிருள் கண்ணகி. கோவலனோடு கூடியிருந்து மகிழ்ந்து பாடுகிருள் மாதவி. கூடிய மாதவிக்குக் களிப்பும், கூடாத கண்ணகிக்கு வெறுப்பும் தருகிறது மாலைப் பொழுது. அந்தக் களிப்பும், வெறுப்பும் எப்படி இருந்தது என்பதற்கும் ஒரு உவமை சொல்கிருர், முத்தமிழ்க் கவிஞர்.

சோழ மன்னனின் வெண் குடை, அவனோடு கூடினுர்க்கு நிழல் தந்ததாம். அவனோடு கூடாதார்க்கு வெப்பத்தைத் தந்ததாம். தன்னை அண்டினேரை ஆதரித்து, தனக்கு அடங்காதாரைத் தண்டிக்குமாம், காவலனின் வெண்குடை. மன்னனின் ஒரே வெண்குடை, ஆதரிப்பாருக்கும், அடங்காதாருக்கும் முறையே நிழலையும், வெப்பத்தையும் தருவதாக எப்படி இருக்கின்றதோ, அதுபோல இருந்ததாம், மதி விரிந்து, மணம் பரப்பும் மாலைப் பொழுது—கூடிய காதலர்க்கு மகிழ்ச்சியையும், பிரிந்த காதலர்க்கு வருத்தத்தையும் தந்தது.

காவலனின் ஒரே குடை—இரு மாறுபட்ட வேலையைச் செய்வது போல, ஒரே மாலைப்பொழுது இரு மாறுபட்ட உணர்ச்சிகளை—கண்ணகியின் மனத்திலும், மாதவியின் மனத்திலும் ஏற்படுத்தியதைச் சித்திரிக்கிருன்—சிலப்பதிகாரத்தைப் படைத்த புலவர் கோமான்.

கூடினர்பால் நிழலாய் கூடார்பால் [வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும், கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது.

ஆஹா! மாலைப் பொழுதை வைத்து—வானைக்காட்டி, அதில் மதி விரியக்காட்டி, மலரை மலரச் செய்து, மாதவியின் மகிழ்ச்சி கூட்டி, கண்ணகியின் வருத்தத்தைத் தீட்டி, சோழ மன்னனின் வெண் கொற்றக் குடையைக் காட்டி—அது, நண்பர்

களுக்கு நிழல் தருவதையும் கூறி, பகைவர்களுக்கு ஈட்டி போன்றது என்றும் அழகுபடக் கவியாய் வடித்திருக்கும் இளங்கோ அடிகளின் கவிதா விலாசந்தான் என்னே!

பாரதி எழுதியுள்ள காவியமான பாஞ்சாலி சபதத்தில், மாலே வருணனை கூறியுள்ளது, படிக்கப் படிக்கத் திகட்டாது.

அடடா! மாலே வர்ணனையை—

கணந்தோறும் வியப்புக்கள் புதிய தோன்றும்;
கணந்தோறும் வெவ்வேறு கனவு தோன்றும்;
கணந்தோறும் நவநவமாய் களிப்புத் தோன்றும்;
கருதிடவும் சொல்லிடவும் எளிதோ? ஆங்கே,
கணந்தோறும் ஒரு புதிய வண்ணங் காட்டிக்
காளிபராசக்தி அவள் களிக்குங் கோலம்
கணந்தோறும் அவள் பிறப்பாள் என்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை இங்குக் காண்பாய்

என்று பாஞ்சாலிக்கு பார்த்தன் காட்டுவதுபோன்று பாடியுள்ளான் பாரதி.

மாலைப் பொழுதில், சூரியன் மேற்கிலே அடையும்போது கண்ட அதிசயங்களே, பாரதியின் இலக்கிய வாசகத்தின் மூலமே படித்துச் சுவையுங்கள்.

"அடி வானத்தில் சூரிய கோளம் தகதகவென்று சுழன்று கொண்டிருந்தது. இருபதுகோடி மின்னல்களை எடுத்து ஒரு சக்கரமாக வார்த்துச் சுழற்றுவதுபோலிருந்தது. ஆரம்பத்தில்தான் கண்கூசும். சிறிதுநேரம் உற்று நோக்கிக் கொண்டிருந்தால், பிறகு கண்கூச்சம் தீர்ந்துபோய் விடும், இரண்டு வட்டத் தகடுகள் ஒன்றின்மேலொன்று சுழலும். கீழே இருப்பது சுத்தமான மின்வட்டம். மேலே மரகத வட்டம். பச்சை வர்ணம்! அற்புதமான பசுமை!

"பச்சைத் தகடு பின்புறத்திலிருக்கும் மின் தகட்டை முழுதும் மறைத்துக் கொண்டிருக்கும். ஆயினும் இடையிடையே பின்னுள்ள வட்டத்தின் வயிரக் கிரணங்கள் கண்மீது பாயும்.

"பார்! சூர்யனைச் சுற்றி மேகங்களெல்லாம் தீப்பட்டெரிவது போலத்தோன்றுகிறது! ஆகா! என்ன வர்ணங்கள்! எத்தனை வித வடிவங்கள்! எத்தனை ஆயிர விதமான கலப்புக்கள்! அக்கினிக் குழம்பு! தங்கம் காய்ச்சி விட்ட ஓடைகள்! எரிகின்ற தங்கத் தீவுகள்!

"நீல ஏரிகள்! கரும் பூதங்கள்! எத்தனை வகை நீலம்! எத்தனை விதச் செம்மை! எத்தனைவகைப் பசுமை! எத்தனை வகைக் கருமை! நீல ஏரியின்மீது மிதக்கும் தங்கத் தோணிகள்! எரிகின்ற தங்க ஜரிகைக் கரை போட்ட கரிய சிகரங்கள். தங்கத் திமிங்கிலங்கள் மிதக்கும் கருங்கடல்! எங்கு பார்த்தாலும் ஒளித் திரள். வர்ணக் களஞ்சியம். போ, போ, என்னால் அதை வர்ணிக்க முடியாது."

துட்டிக்கதைகள்

உறவாடிக் கெடுத்தல்

ஒருநாள் ஆட்டுக் கூட்டத்திடம் ஓநாய்களின் சமாதான தூதுகோஷ்டி ஒன்று சென்றது.

"நமக்குள் வேற்றுமை ஏன் தலைகாட்ட வேண்டும்? இந்த நாய்கள் தான் நம்மைப் பிரித்து வைக்கின்றன. அவைகள் தான் உண்மையில் நம் இருவருடைய ஜன்ம சத்ருக்கள். நாய்கள் கர்ணகடூரமாகக் குலைப்பதால் தான் எங்களுக்குக் கோபம் ஏற்படுகிறது. உங்களுடன் அநாவசியமாகச் சண்டைக்கு வர நேரிடுகிறது. நாய்களின் தொல்லைமட்டும் இல்லையென்ருல் நாம் இருவரும் நட்புறவுடன் வாழமுடியும். நீங்கள் நாய்களை விரட்டிவிடுங்கள். எங்கள் நல்லெண்ணத்தைக் காட்டுவதற்காக எங்களது குட்டிகளை உங்களிடம் பணயம் வைக்கிறோம். அப்புறம் நாம் சண்டைசச்சரவில்லாமல் நிம்மதியாக வாழமுடியும்" என்று ஓநாய்களின் தூதுகோஷ்டி ஆடுகளிடம் சொல்லிற்று.

புத்தியற்றஆடுகளுக்கு ஓநாய்களின் யோசனை சிறந்ததாகத் தோன்றியது. 'சரி' என்று ஒத்துக்கொண்டன. காவல்காத்து வந்த நாய்களை விரட்டிவிட்டன. ஓநாய்களும் ஒப்பந்தப்படி தங்கள் குட்டிகளை ஆடுகளிடம்கொண்டு வந்துவிட்டன.

குட்டிகளால் எவ்வளவு நாட்களுக்குத்தான் தாய்களை விட்டுப் பிரிந்திருக்க முடியும்? இரண்டொரு தினங்களில் குட்டிகள் தங்கள் தாய்களைத் தேடிக் கத்த ஆரம்பித்தன. தங்கள் குட்டிகளைச் சரிவரக் கவனிக்காமல் இருந்ததால்தான் அவைகள் கத்துகின்றன என்று ஆடுகளின்பேரில் ஓநாய்கள் குற்றம் சாட்டின. அப்படிச் சரிவர கவனிக்காதது, ஒப்பந்தத்தை மீறிய செய்கை என்றும், அதனால் இனிமேல் தாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாதென்றும் கூறி, ஓநாய்கள் ஆடுகளின் பேரில் பாய்ந்தன. பாவம், ஆடுகளைக் காப்பாற்ற இப்பொழுது நாய்களும் அங்கில்லை. அத்தனை ஆடுகளும் மாண்டன.

* * *

எல்லாம் என்றுதான் !

கருமி ஒருவன் தன் பணத்தை ஒரு மரத்தின் அடியில் புதைத்து வைத்தான். தினசரி அங்குபோய் அதைத் திறந்து பார்த்து சந்தோஷப்படுவான். இவனது செய்கைகளைக் கவனித்துவந்த ஒரு திருடன் ஒரு இரவு பணத்தைத் திருடிக்

ஈசாப்

கொண்டு போய்விட்டான். மறு நாள் காலை வழக்கம்போல் அங்கு கருமிவந்தான்; பணத்தைக் காணவில்லை. வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கருமி கதறினன். இவனது கூக்குரலைக் கேட்ட அண்டை வீட்டுக்காரன். நண்பரே! வருந்த வேண்டாம். செலவு செய்வதற்குத்தான் பணம் இருக்கிறது. உங்களிடம் இருந்தால் நீங்கள் செலவு செய்யப்போவதில்லை. உங்களிடம் இருப்பதும் இல்லாதிருப்பதும் எல்லாம் ஒன்றுதான். ஆகவே பணத்தைத் தாங்கள்வைத்த இடத்திலேயே இருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள்! எதற்காக அனுவசியமாக வருந்துகிறீர்கள்?" என்று ஆறுதல் சொன்னன்.

* * *

அதிக நம்பிக்கை

ஒரு மரத்தின் அடியில் இருந்த பெரிய பொந்து ஒன்றில் ஒரு பன்றி வசித்துவந்தது. அதே மரத்தில், மத்தியில் இருந்த பொந்தில் ஒரு காட்டுப் பூனையும் உச்சியில் ஒரு கழுகும் வாசம் செய்தன. அவைகள் அம்மாதிரியே வெகு காலம் இருந்திருக்கலாம். ஆனால் பூனை விடவில்லை; விஷமம் செய்ய ஆரம்பித்தது. ஒருநாள் கழுகிடம் அது சென்று, "நண்பரே! அந்தப் பொல்லாத பன்றி என்னசெய்கிறது தெரியுமா? மரத்தை அறுத்து கீழே தள்ள அது வேலை செய்கிறதாக்கும்! மரம் விழுந்தவுடன் நமது குஞ்சுகளையும் குட்டிகளையும் தின்றுவிடலாம் என்று அது திட்டமிடுகிறது" என்று கூறியது. இதைக் கேட்ட கழுகு பதறிப்போய், தன் குஞ்சுகளைக் காப்பதற்காக, மரத்தைவிட்டு வெளியே போகாமல் குஞ்சுகளுக்குக் காவல் காத்துவந்தது. அடுத்தநாள், பூனை மரத்தடிப் பொந்துக்குச் சென்றது. பன்றியைச் சந்தித்து "தோழரே! மேலே உச்சியிலிருக்கும் பொல்லாத கழுகு என்ன சொல்லுகிறது என்பது உனக்குத் தெரியுமா? அடுத்த தடவை நீ வெளியே போனதும் உன்னுடைய குட்டிகளைத் தூக்கி வந்து விருந்து வைப்பதாக தனது குட்டிகளிடம் நேற்றிரவு சொல்லிக்கொண்டு இருந்தது. அந்த அயோக்கியனின் வார்த்தைகளை இந்தக் காதாலேயே நான் கேட்டேன்" என்று கூறியது.

இதைக் கேட்ட பன்றி, நடு நடுங்கிப்போய் தன் குட்டிகளுக்குக் காவலாக பொந்துக்குள்ளேயே அடைந்து கிடந்தது. இம்மாதிரி பன்றியும் கழுகும் தங்கள் தங்கள் இருப்பிடங்களிலேயே அடைபட்டுக் கிடந்ததால் உண்ண உணவு இல்லாமல் பட்டினிகிடந்து மாண்டன. மாண்டபின்னர் அந்தத் தந்திரக்காரப் பூனைக்கும் அதன் குட்டிகளுக்கும் கொழுத்த இரையாயின.

வெட்சியும் கரந்தையும்

[எஸ். ராமகிருஷ்ணன்]

2

சங்ககாலச் சான்றோர்கள், தமிழ் நிலத்தை நானிலம் என்று வழங்கினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நால் வகை நிலங்களுக்கும் பெயர் வழங்கினர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்படும். குறிஞ்சிச் செடியை மிகுதியாகக்கொண்ட நிலமானதால் அந்தப் பெயர் ஏற்பட்டது. குறிஞ்சி நில மக்களைக் குறவர், வேடர் அல்லது எயினர் என்று வழங்குவது மரபு. வில் அம்பு கொண்டு வேட்டையாடியும் தினை பயிரிட்டும் வாழ்ந்தவர்களே குறிஞ்சி மக்கள். மேய்ச்சல் பூமிகளை நிறையப்பெற்ற காடு அடர்ந்த நிலமே முல்லை. ஆநிரைகளை மேய்த்தும் வரகு முதலிய புன்செய்த் தானியங்களைப் பயிர் செய்தும் வாழ்ந்தவர் முல்லை நில மக்கள். அவர்கள் ஆயர் அல்லது இடையர் எனப்படுவர். காட்டைத் திருத்திக் கழனியாக்கிக் குளம் தொட்டு வாய்க்கால் வெட்டி நீர்பாய்ச்சி, நெல் முதலிய நன்செய்த் தானியங்களை விளைவித்து வாழ்ந்தவர்களே மருத நில மாந்தர். இவர்கள் உழவர் எனப்படுவர். மருத நிலத்தில் தான் அரசியல் தோன்றியது; நாகரிகம் வளர்ந்தது; கைத்தொழிலும் வாணிகமும் சிறந்தன. கடலும் கடல் சார்ந்த நிலமும் நெய்தல் நிலமாகும். முல்லைப் பூவை நிறையப்பெற்ற நிலம் முல்லை நிலம் எனப்பெயர் பெற்றதைப்போல, நெய்தற் கொடி பரவிப் படர்ந்திருந்ததால் நெய்தல் நிலம் என்ருயிற்று. நெய்தல் நில மக்கள் பரதவர் எனப்படுவர். அவர்கள் மீன் பிடித்து வாழ்ந்தனர்; பிறகு, படகில் சென்று பிடித்த மீனையும் பாத்திகளில் விளைவித்த உப்பையும் விலைப்படுத்தி வாழ்ந்தனர். அதன்பின், கடல் வாணிகத்தில் பெரும் பங்கு கொண்டு பொலிவுற்றனரென்பது வரலாறு.

நீரும் நிழலும் அற்ற பாலை என்று ஐந்தாவது பகுதியாக ஒன்றைக் குறிப்பிடுவது உண்டு. ஆனால் எல்லாப் பருவத்திலும் பாலையாக விளங்கும் நிலம் தமிழகத்தில் கிடையாது. எனினும், சூரிய வெப்பத்தின் காரணமாக முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, பாலை வடிவத்தைக் கொள்ளும் காலம் உண்டு. இதையே,

"முல்லையுங் குறிஞ்சியும்
முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து
நடுங்கு துயரத்துப்
பாலை யென்பதோர்
படிவங்கொள்ளும் காலை"

என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. எனவேதான் பாலை என்ற தனி நிலம் ஒன்றைத் தமிழகத்துத் தொல்லாசிரியர்கள் வகுத்துக்கொள்ளவில்லை. குறிஞ்சியும் முல்லையும் முறை திரிந்து பாலை வடிவம் மேற்கொள்வதையே 'சுரம்' என்று பண்டைய இலக்கியங்கள் கூறும்.

வேடர்கள் எனப்படுவோரே பூர்வீகத் தமிழர்கள். கால்நடை வளர்ப்புக் கலையைத் தமிழர்கள் அறிந்து பயின்ற பிறகே, இடையர் என்ற தொழிற் பிரிவு ஏற்பட்டது. அதற்கும் பின்னர், பயிர்த் தொழில் முறையைத் தமிழர்கள் கற்றபின், மருதநில நாகரிகம் அமைந்தது. அந்த நாகரிகத்தின் வளர்ச்சியில் கைத்தொழிலும் வாணிகமும் பல்கிப் பெருகின. மருத நாகரிகம் அமைந்த பிறகும், அதன் அரசுகளுக்கு உட்படாத குறிஞ்சிப்பகுதிகளிலும் முல்லைப் பகுதிகளிலும், வேடர் வாழ்வும் இடையர் வாழ்வும் ஆங்காங்கே ஏறத்தாழ இயல்பு குன்ருமல் எஞ்சி நின்றன. எனவேதான், இளங்கோவின் சிலப்பதிகாரத்தில், நாகரிகச் சிறப்புமிகுந்த பூம்புகார் நகரிலிருந்து, பண்பாட்டுப் பெருமை மிகுந்த மதுரைக்கு வந்த கோவலனும் கண்ணகியும் இடையில் எயினர் வாழும் காட்டைக் கடந்ததாகக் கூறி, வேட்டுவ வரியை அமைத்திருக்கிருர் ஆசிரியர்.

எயினர்கள், இடையர்களின் கால் நடைகளைக் கவர்ந்து பங்கிட்டுக்கொண்டதையே வெட்சித் திணையும் அந்தக் கால்நடைகளை மீட்பதற்கு இடையர் எடுத்த முயற்சிகளையே கரந்தைத்திணையும் விவரிப்பதை முன்பே குறிப்பிட்டோம். புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்து, வெட்சித்திணை மாந்தர்களின் வாழ்வை ஒருவாறு அறிந்தோம். சிலப்பதிகாரத்தின் வேட்டுவ வரியிலிருந்தும், எயினர் வாழ்வைப் புலப்படுத்திேனும். இனி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொகை நூலான பத்துப்பாட்டின்* துணைகொண்டு எயினர் வாழ்வை அறிவோம்.

பரிசில்பெறக்கருதிய பாணன் ஒருவனை, பரிசில் பெற்ற பாணன் ஒருவன் சந்தித்து நல்லியக் கோடன் என்ற குறுநில மன்னனை நாடும்படி வழிகாட்டுவதாக அமைந்திருக்கும் பாட்டே சிறுபாணற்றுப்படை. அதில் அந்த வள்ளலை அடைவதற்கான வழியைத் தெரிவிக்கும்

* திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணுற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து பாட்டுக்களின் தொகை நூலே இது.

வகையில், பல்வகை நிலங்களின் சிறப்பு குறிக்கப்படுகிறது. முல்லையும் குறிஞ்சியும் வான்சிறப்பு குன்றியதால் பாலைத் தன்மை அடைந்த வேலூரில் எயினர்கள் நடத்தும் வாழ்வை ஆசிரியர் எடுத்துரைக்கிருர். வேற்படைகொண்டு வெற்றி பெறும மக்கள் வாழ்வதால் அது வேலூராயிற்று. அந்த வேலூரில், "உறுவெயிற்கு உலை இய உருப்பு அவிர் குரம்பை"யில் (உள்ளிருப்போர் வெப்பத்தால் வருந்தும் வகையில் விளங்கும் குடிசைகளில்), எயினர்கள் வாழ்ந்தனர். அங்கு பாணர்கள் சென்ருல், எயினர் குலப்பெண்கள் அவர்களுக்கு நல்வரவு கூறிப் புளிங்கறிச் சோறும் மானினுடைய இறைச்சியும் அளித்து அழிபசி தீர்ப்பார்கள். எயினர்கள், சூரிய வெப்பத்தைத் தடுக்கமுடியாத கூரைக் குடிசைகளில் வாழ்ந்தன ரென்பதும், அவர்கள் பாணர்களுக்கு விருந்தளிக்கும் இயல்பினரென்பதும் புலனுகின்றன.

மலைபடுகடாம் என்ற பாட்டில் எயினர் வாழ்வைப்பற்றி விவரமான குறிப்புக்கள் உள்ளன. அந்த மலைவாணர்கள் சிற்றூர்களில் வாழ்ந்தனர். அவர்கள் தினைச்சோறும் பன்றித்தசையும் உண்பார்கள். தேறலையும் நெல்லாற் சமைத்த கள்ளையும் குடிப்பார்கள். அவர்கள் பலாப்பழ விதையின் மாவையும் புளியம் பழத்தின் புளிப்பையும் மூங்கிலரிசியையும் உலையில் பெய்து சோருக்கி, நன்னன் என்ற குறுநில மன்னனைத் தேடிவரும் கூத்தர்களுக்கு விருந்தளிப்பார்கள். அந்தக்கூத்தரை, நிறைந்த மனத்துடன் வரவேற்று, 'அண்ணன், மாமன்' என்பதுபோல முறை கொண்டாடிச் சோறும் இறைச்சியும் கள்ளும் அளித்துக் குதூகளிப்பார்கள். அந்த வட்டாரத்தில், பாம்புகள் பள்ளங்களில் பதுங்கிக் கிடக்கும். தினைப் புலன்களின் பரண்களிலே நின்று, குறப்பெண்கள் கையைக் கொட்டிக் காவல்காப்பார்கள். வேடர்களோ, கவணிலிருந்து கற்களை விடுத்து யானைகளை விரட்டுவார்கள்.

தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கு உரைத்ததாக அமைந்துள்ள மதுரைக் காஞ்சியும் மலைவாணர் வாழ்வைக் குறிப்பிடுகிறது. பாண்டிய ஆட்சிக்கு உட்பட்டவர்களும் வளமார்ந்த மலைப் பகுதியில் வாழ்ந்தவர்களுமான இந்த மலைவாணர்கள், அகிலையும் சந்தனத்தையும் வெட்டி எடுப்பர்; மேட்டு நிலத்தில் தோரைநெல்லைச் சாகுபடி செய்வர். கடுகு, இஞ்சி, மஞ்சள், மிளகு முதலிய பண்டங்களையும் சாகுபடிசெய்வர். தினைப்புலங்களில் கிளியை ஓட்டும் ஓசையும் குறவன் ஆண் பன்றியைக் கொல்வதாலுண்டான சத்தமும் பன்றியைப் புலிகொல்லும் ஆரவாரமும் அருவிகளின் ஓசையும் அந்தப் பிரதேசத்தில் நிறைந்திருந்தன. காட்டுப் பசுவை ஓட்டும் ஆரவாரத்தையும் ஆசிரி

யர் குறிப்பிடுவதால், இந்த மக்களிடம் பசுக்களும் இருந்தன வென்று ஊகிக்கலாம். இந்தப் பாட்டுக்களுக்கு முந்தியதாகக் கருதப்படும் பெரும்பாணாற்றுப் படையில் சுயேச்சையாக வாழும் வேடர்களைப்பற்றி விவரங்கள் உள்ளன. எனவே, நமது பரிசீலனையில் அது முக்கியமானதாக உள்ளது.

காஞ்சி நகரத்தில் ஆட்சி புரிந்த தொண்டைமான் இளந்திரையனிடத்துச் சென்று கொடைபெறும்படி ஒரு பாணன் இன்னொரு பாணனுக்கு வழி காட்டியதாக அமைந்த பாட்டு இது. வழியில் உள்ள கானவர்களின் வாழ்வை ஆசிரியர் விவரிக்கிறார். அகன்ற காட்டு வழிகளில் விற்படை கொண்ட வேடர்களின் ஊர்கள் உள்ளன. அவர்களுடைய குடிசைகளின் கூரைகள், அணிலும் எலியும் நுழையமுடியாதபடி, ஈச்சமர இலைகளால் வேயப்பெற்றுள்ளன. எயினர் குலப் பெண்கள் கரம்பை நிலத்தைத் தோண்டி எறும்புகள் சேர்த்துவைத்த புல்லரிசியைக் கண்டுபிடித்து எடுத்துவருவார்கள். முற்றத்தில் தோண்டிய உரலில்,உறுதியான உலக்கையால் குத்துவார்கள். ஆழத் தோண்டிய கிணற்றில், குறைவாக ஊறும் உப்புநீரை முகந்து, வாய்உடைந்த பானையில் வார்த்த உலையை அடுப்பில் வைத்து, சோறு ஆக்குவர். அந்தச் சோற்றையும் உப்புக்கண்டத்தையும், தாம் உண்பதுடன், வந்துபோகும் பாணர்களுக்கும் வரையாது கொடுத்து உபசரிப்பார்கள். அந்த எயினர்கள் இரவில்கூட உணவு சேகரிப்புக்காகப் பாடுபடவேண்டும். நள்ளிரவில் பள்ளத்தில் மறைந்திருந்து, குழிகளில் தேங்கிய நீரைக் குடிக்கவரும் பன்றிகளை வேட்டையாடுவர். பகலிலோ, 'நெடுசெவி குறுமுயலை' (நீண்ட செவியினையுடைய குட்டை முயலை) வேட்டையாடுவர்.

இவ்வாறு கஷ்டப்பட்டு இறைச்சியும் சோறும் பெறுகின்ற கானவர்கள் அவற்றைக் கூட்டாக உண்பார்கள். "கடுங்கட் கானவர் கூட்டுண்ணும் அருஞ்சுரம்" என்று ஆசிரியர் கூறுகிறார். "வீரத்தை எடுத்துக்காட்டும் கூரிய பார்வையை உடைய கானவர் கூட்டாக உண்ணும் அரிய பாலை" என்பது இதன் பொருள்.

பாலை வடிவத்தை மேற்கொண்ட இந்த நிலத்தைக் கடந்தால், குறிஞ்சிநில அரணை அடையலாம். இதையே, "அருசுரம் இறந்த அம்பர்" (சுரம் - பாலை; அம்பர் - அப்பால்) "குறும்பிற் சேப்பின்" (குறும்பு- அரண்) என்று ஆசிரியர் குறிப்பிடுவார்.

அந்த அரண் முள்வேலியால் சூழப்பட்டது; காவலை உடையது; அதன் மதில் ஊகம் புல்லால் வேய்ந்து உயர்ந்தது. அரண்வாசலில் பகைவர்களைக் குத்திக் கொல்வதற்காகக் கழுமரங்கள் நிறைய உண்டு. கணையமரத்தால் செய்த கதவைக் கொண்டதாக வாசல்

அமைந்திருக்கிறது. வேடர்களின் தொன்மை வாய்ந்த துணைவரான நாய்கள் வாசலில் காவல்புரிகின்றன, உள்ளே போனால், அம்புக் கட்டுகளும் துடிகளும் உள்ள பந்தலும், வில்களும், வேல்களும் உள்ள படைவீடுகளும் பார்க்கலாம். இந்த அரணுக்குள்ளிருந்த ஊரில் வாழ்ந்த எயினர்கள் ஈச்சவிதை போன்ற சோற்றையும் உடும்பினது பொரியலையும் பாணர்களுக்கு வழங்கி உபசரிப்பர்.

இந்த மறவர்கள் வாட்போரில் வல்லவர்கள். எயினர் குலப் பெண்கள் வீராங்கனைகள் என்பதை,

"யானை தாக்கினும்
அரவுமேல் செலினும்
நீல்நிறம் விசும்பின்
வல்ஏறு சிலைப்பினும்
சூல்மகள் மாறு
மறம்பூண் வாழ்க்கை"

[அரவு-பாம்பு. வல் ஏறு-இடி. சிலைப்பினும் - ஒலித்தாலும். சூல் மகள் - கர்ப்பவதி.]

என்று குறிப்பிடுவார்.

இந்த மறவர் குலத்தின் தலைவன்,

"புலி போத்து அன்னபுல் அணல்காளை"

[புலி போத்து - ஆண் புலி. புல் அணல் - சிறிய தாடி.]

யாக விருந்தான். இந்த மறவர் குடியின் ஆற்றலையும் கூட்டாக உண்டு வாழும் ஒழுக்கத்தையும், புலப்படுத்தும் வகையில், 'வலிக்கூட்டுணவின் வான்குடிப் பிறந்த' என்று கூறுகிறார். மறவர் குலத் தலைவன், "கருவில் சுற்றமொடு" (கொடிய வில்லைத் தாங்கிய சுற்றத்தாருடன்) "கேளா மன்னர் கடிபுலம் புக்கு நாள் ஆதந்து" (தன் வார்த்தை கேளாத பகைவரது காவற்காட்டில் விடியற்காலையில் புகுந்து பசுக்களைக் கவர்ந்து) வருவரென்று கூறி, அவர்களுடைய ஆநிரை கவரும் இயல்பை விளக்குகிறார்.

கவர்ந்த பசுக்களைக் குறிஞ்சி நில வேடர்கள் தாமே வளர்ப்பதில்லை. வளர்ப்புக்குத் தேவையான மேய்ச்சல் வசதியும் அவர்களுடைய நிலத்தில் கிடையாது, எனவே அவர்கள் அந்த ஆநிரைகளைக் கள் விற்பவளிடம் கொடுத்துக் கள்ளைப் பெறுவார்கள். இதையே "நறவு நொடை தொலைச்சி" (நறவு - கள். நொடை - விலை.) என்பார் ஆசிரியர். மதிப்பில் உயர்ந்த பசுக்களை மதிப்பில் குறைந்த கள்ளுக்கு விலையாகப் பண்ட மாற்றுச் செய்வதால், "தொலைச்சி" என்று கூறிய நயம் கவனிக்கத் தக்கது. சில சமயங்களில், ஆயர் குலப் பெண்களிடம் நெய் வாங்கிக்கொண்டு, கவர்ந்து வந்த பசுக்களையும் எருமைகளையும் கொடுப்பதும் உண்டு. இதை முல்லை நிலக் குடியைப்பற்றிக் கூறுங்கால்,

"எருமை நல்ஆன்
கருநாகு பெறூஉம் குடி"

[கரு நாகு - கரிய இளம் எருமை. ஆ - பசு.]

என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். கவர்ந்த எருதுகளை மட்டும் மறவர்கள் கொன்று தின்பார்கள்.

கள்விலையாட்டியிடம் வாங்கும் கள்ளுடன் இல்லிலே நெல்லாற் செய்த தோப்பி என்ற இனிய கள்ளையும், ஊர் மன்றத்தில் கூடும் மறவர்கள் குடிப்பார்கள். எருதை அறுத்துத் தின்றும், கள்ளைக்குடித்தும், பகலெல்லாம் தண்ணுமை முழங்க ஆடுவார்கள். இதையே,

"இல்அடுகள் இன்தோப்பி பருகி
மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவண்சிலைப்ப
சிலைநவில் எறுழ்தோள் ஓச்சிவலன்
பகல் மகிழ் தூங்கும்" [வளையூஉ

என்பார் ஆசிரியர்.

[அடு - சமைத்த; தோப்பி - நெல்லில் செய்த கள்; மல்லல் - செழித்த: விடை - எருது; கெண்டி - அறுத்துத் தின்று; மடிவாய்த் தண்ணுமை - மடித்த வாயை உடைய மத்தளம் போன்ற கருவி; சிலைப்ப-ஒலிக்க; சிலைநவில் - வில்லுப் பயின்ற; எறுழ் - வலிமை உடைய; தூங்கும் - ஆடும்.]

மன்றத்தில் கூடிய மறவர்கள் (ஆண்களும் பெண்களும்) எருதின் இறைச்சியைத் தின்று கள்ளைக் குடித்து, தண்ணுமை ஒலியுடன் ஆடுகிறுர்கள்; இடது தோளை வலப்பக்கத்தில் வளைத்துப் பகலெல்லாம் மகிழ்ச்சியுடன் ஆடுவார்கள். இதுவே புறப்பொருள் மாலையின் வெட்திணை அதிகாரம் குறிப்பிடும் 'உண்டாட்டு' என்பதாகும்.

பாலையாகத் திரிந்த நிலத்தில் வாழ்ந்த வேடர்களும் குறிஞ்சி நிலக் கானவர்களும் சிற்றூர்களில் வாழ்ந்தன ரென்பதும் அவர்கள் தத்தம் ஊர் மன்றத்தில் ஒன்ருகக் கூடி உண்பதையே முறையாகக் கொண்டவரென்பதும், ஆநிரையைக் கவர்வதை இயல்பாகக் கொண்டவரென்பதும், ஊர்மன்ற உண்டாட்டு அவர்களுடைய வழக்கம் என்பதும் செவ்வையாகப் புலனுகின்றன.

குறிஞ்சிநிலக் குறவர்கள் மன்றத்தில் கூடிக் கள்ளுண்டு ஆடும் கூத்தைக் குரவைக்கூத்து என்பர். குரவைக்கூத்தின் பல வகைகளில் இதுவும் ஒன்று. குரலெழுப்பிக் கூத்தாடுவதால், குரவைக்கூத்து என்ருர் போலும். இந்தக் கூத்தை,

"நறவுநாட் செய்தகுறவர்
தம்பெண்டிரொடு
மான்தோல் சிறுபறை
கறங்கக் கல்லென
வான்தோய் மீமிசை
அயருங் குரவை"

என்று மலைபடுகடாம் குறிப்பிடும். "பொழுது விடிந்தவுடன் கள்ளுண்ட குறவர்கள், தம்பெண்டிரோடு, மான் தோல் போர்த்திய சிறுபறை கல்லெனும் ஓசையெழுப்ப, வானை அளாவும் உச்சி மலையில் ஆடும் குறவைக் கூத்து" என்பது இதன் பொருள்.

இந்தக் குறவைக் கூத்தில், ஆண்களோடு பெண்களும் சேர்ந்து ஆடுவரென்பது உற்று நோக்கத் தக்கது.

"தொண்டகப் பறைச்சீர்
பெண்டிரொடு விரைஇ
மறுகில் தூங்கும்
சிறுகுடிப் பாக்கத்து,"

என்ற அகநானூறு (118)கூறும்.

(சிறுகுடிப்பாக்கம் — சிற்றூர், வேட்டுவர் ஊர் ; மறுகில் – வீதியில்.)

குறிஞ்சி நிலத்தில் அமைந்த சிற்றூரில் வாழும் குறவர்கள், தம் பெண்டிரை விரும்பி வீதியில் குறவை ஆடுவர். அப்பொழுது தொண்டகப் பறைகொட்டுவர். அகநானூற்றில், குறிஞ்சித் திணைக்குரிய இன்னொரு பாட்டில் (அகம், 232), குன்றத்தை அடுத்த சிற்றூர் மன்றத்தின் வேங்கை மலர்கள் விழுந்து கிடக்கும் முன்றிலில், "குறவர் மனைமுதிர் மகளிரொடு குரவை தூங்கும் ஆர்கலி விழவுக்களம்" அமைந்த செய்தி காணப்படுகிறது.

(ஆர்கலி—ஆரவாரம். விடிவு —விழா. இந்தக் குரவைக் கூத்துக்கு இலக்கணம் தருங்காலையில், அடியார்க்கு நல்லார்,

"குரவை யென்பது கூறுங் காலைச் [யும்
செய்தோர் செய்த காமமும் வென்றி
எய்தக் கூறும் இயல்பிற்றாகும்"

என்ற வரிகளை மேற்கோளாகத் தருகிறார். (சிலப்பதிகாரம், பதிகம் 77).

எனவே, காமமும் வென்றியும் பொருளாகக் கொண்டதும், ஆண்களும், பெண்களும் விரும்பிக்கூடி ஆடுவதுமான கோஷ்டி நடனமாகக் குறவர்களின் குறவைக் கூத்து இருந்ததென்பது வெள்ளிடை மலை.

இத்தகைய கோஷ்டி நடனம், கோஷ்டித் திருமணச் சமூகத்திலேயே தோன்றியிருக்க வேண்டுமெனக் கருதுவது இயல்பன்றோ?

ஆதியில் கோஷ்டித் திருமணம் தமிழகத்தில் நிலவியதற்கு நேரடியான இலக்கியச் சான்றுகள் புலப்படவில்லையென்றாலும், இதர பூர்வ குடிகளைப் போலவே தமிழ்நாட்டுப் பூர்வீக குடிகள் மத்தியிலும் கோஷ்டித் திருமணம் இருந்ததென்பதை அனுமானிக்க இடம் உண்டு. எனவே பண்டைக் காலத் தென்னிந்திய வரலாற்றின் ஆராய்ச்சியில் பெரும் பணியாற்றியுள்ள சரித்திரப் புலவர் ராமச்சந்திர தீட்சதர் அவர்கள், தென்னாட்டின் பூர்வீக மக்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "பேதா பேதமில்லாத ஆண் பெண் புணர்ச்சியும் கோஷ்டித் திருமணங்களும் அக்கால வழக்கமாயிருந்தன" என்று குறிப்பிடுகிறார். (சரித்திர முக்காலத் தென்னிந்தியா என்ற ஆங்கில நூல். பக்கம் 113)

பூர்வீகத் தமிழர்கள், இதர பூர்வீகக் குடிகளைப் போலவே, கோஷ்டித் திருமண முறையைக் கடைப் பிடித்ததே 'தாய் வழி முறை'க்குத் தோற்றுவாயாக விருந்தது.

கோஷ்டித் திருமண முறை நிலவும் சமூகத்தில், குழந்தைகளின் தந்தையரை உறுதியாக நிர்ணயிக்க முடியாது; தாய்மார்களையே தீர்மானமாகக் குறிக்க முடியும். எனவே, வம்சவழியைத் தாய் மூலம் கணிப்பதே சாத்தியமாயிற்று.

பூர்வீகச் சமூகத்தில் பெண்

கள் உயர் நிலையில் இருந்ததால், ஆதி மக்களின் முதல் தெய்வமும் பெண் தெய்வமாக இருந்தது. பூர்வீகத் தமிழர்களின் முதல் தெய்வம் கொற்றவை அல்லது ஐயை என்பவளே. எனவேதான், சிலப்பதிகாரம் என்ற ஆங்கில விமர்சன நூலில், தீட்சதர் அவர்கள் பின்வறுமாறு கூறுகிறார் :—

"மிகத் தொன்மையானகாலத்திலிருந்தே ஐயை அல்லது கொற்றவை என்ற தெய்வம் தென்னிந்தியாவில் வேடர்களின் இஷ்ட தேவதையாக இருந்துவந்திருக்கிருள். அவளை வெற்றித் தெய்வமாக அவர்கள் வழிபட்டனர்."

பின்னுளில்தான் முருகன் வேடர் குலத் தெய்வமாகத் தோன்றினன். அதற்கும் பிறகு, சிவன் என்ற தமிழ்க் கடவுள் தோன்றினன். கொற்றவை வணக்கம் வாழையடி வாழையாக நிலவிவந்ததால், கொற்றவையைச் சக்தியாக, சிவனது பத்தினியான உமையாகக் கற்பிக்கும் கருத்து உருப்பெற்று நிலை கொண்டது. முருகனும் வேடர்குல மகளான வள்ளியைத் திருமணம் புரிந்துகொண்டதாகக் கதை தோன்றியது. ஆதிக்காலத் தமிழர் கொற்றவையையே வழிபட்டனர் என்பது வெட்சித் திணையின் இலக்கணத்திலிருந்தும் சிலப்பதிகார வேட்டுவ வரியிலிருந்தும் விளங்கும். வேறு ஒரு தெய்வமும் முன்னுள் வெட்சியாருக்குக் கிடையாதென்பது ஒரு தலை.

பூர்வீகத் தமிழர்கள், இதர குடிகளைப் போலவே, கூட்டு வாழ்வில்தான் தற்காப்பை உறுதி செய்ய முடிந்தது. ஆளி, மகிஷம், சிங்கம், புலி முதலியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு, ஒற்றுமை முதற் தேவையாக இருந்தது. எனவே ஒவ்வொரு குலமும் ஒரு குடும்பமாக வாழ்ந்தது.

இந்தச் சமூகத்தின் கூட்டுச் சக்தியையே அவர்கள் தெய்வ சக்தியாகக் கருதினர்கள். தமது முன்னேர்கள் மகிஷம் முதலிய விலங்குகளை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டதை, கொற்றவையின் சாதனையாகக் கருதினர்கள். எனவே, கொற்றவை, வெற்றியை அளிக்கும் வாளினை உடையவளாகவும், யானைத் தோலை மேலே போர்த்துப் புலியின் தோலை அரைக்கண் உடுத்து, எருமைக் கடாவையும் சிங்கத்தையும் கொன்றவளாகவும், மகிஷாசுரன் என்ற மகிஷத்தைச் சம்ஹாரம் செய்தவளாகவும் போற்றினர். படையெடுத்துப் பசுக்களைக் கவரச் செல்லும்பொழுது கொற்றவை அவர்களுக்குத் தலைமை தாங்குவதாக அவர்கள் எண்ணினர்.

ஆக, வெட்சித் திணைக்குரிய பூர்வீக வேடர்களைக் குறித்து கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வருகிறோம் :—

1. அந்த வேடர்கள் மலைவாணர்களாவார்கள்.

2. அவர்கள் குறிஞ்சி நிலத்திலும் பாலையாக மயங்கிய நிலத்திலும் வாழ்ந்தனர்.

3. அவர்கள் சிற்றூர்களில் தனித்தனிக் குலங்களாகவும் சுயேச்சையாகவும் வாழ்ந்தனர்.

4. அவர்கள் யானை, சிங்கம் முதலிய விலங்குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள வேண்டியிருந்தது. மான், பன்றி முதலிய விலங்குகளை வேட்டையாடியும் புல்லரிசியையும் மூங்கிலரிசியையும் சேகரித்தும் உணவு பெற்றனர்.

5. அவர்கள் மிருகங்களின் தோலையும் பல் கொம்புகளையும் கூடப் பயன்படுத்தினர். மான் தோலில் படுப்பதும் புலித் தோலை அணிவதும் அவர்களுக்குப் பழக்கம். காட்டுப் பன்றியைக் கொன்றபின் அதன் கொம்பைப் பெண்கள் தலைச் சூடியாக அணிவதுண்டென்றும், மலையாள அச்சிமார்களைப் போல, குறவர் குலப் பெண்கள் இடுப்புடையும் மேலுடையும் அணிவதுண்டென்றும் தீட்சதர் கூறுகிறார். (செந்தமிழ் 31ம் வால்யூம்.)

குறவர் குலப் பெண்கள் புலிப் பற்களை மாலையாகக் கட்டி அணிவதுண்டு.

6. அவர்கள் மூங்கிலால் செய்த அம்பும் வில்லும் பயன்படுத்தினர். அவர்களுடைய ஈட்டியும் கவணும் கல்லால் செய்தவை. நிலத்திலேயே உரல் தோண்டிக் கல்லுலக்கையால் புல்லரிசியைக் குத்துவர்.

7. ஊரைச்சுற்றி முள்வேலி கட்டியும், புல்மதில் அமைத்தும், மரக்கதவு செய்து வைத்தும், காவற்காட்டில் நாய்களை நிறுத்தியும் அவர்கள் தற்காப்பு அரண் அமைத்துக்கொண்டனர்.

8. நடுவூர்மன்றமே வாழ்வின் மையமாக இருந்தது. முள்வேலிக்குள் அமைந்த அந்த மன்றத்தில்தான் அவர்கள் கூடிப் பேசுவார்கள், உண்பார்கள், கொற்றவையை வழிபடுவார்கள், மதுவுண்டு மகிழ்வார்கள், குரவைக்கூத்து ஆடுவார்கள்; கவர்ந்த ஆநிரைகளைப் பங்கு போட்டுக்கொள்வார்கள்; விருந்தினரை உபசரிப்பார்கள்.

9. அவர்கள், கள்ளுக்காகவும் நெய்க்காகவும், கவர்ந்த பசுக்களைப் பண்டமாற்றுச் செய்து கொள்வார்கள்.

10. அவர்களுக்குச் சகுனத்தில் நம்பிக்கையுண்டு. நிமித்திகம் கூறுபவனைப் புலவன் என்றே போற்றினர். வேல் வடித்துக் கொடுக்கும் கொல்லன், துடி கொட்டும் துடியன் ஆகியோரும் அந்தச் சமூகத்தில் இருந்தனர். எல்லோரும் களிறு எறிந்து பெயர்க்கும் காளையராயிருந்தனர். பெண்களும் வீராங்கனைகளாகவிருந்தனர். அனைவருமே ஆடிப்பாடும் கலைஞர்களாயிருந்தனர்.

11. குலத்துக்கு நன்மை செய்வது எதுவோ அதுவே நல்லொழுக்கமென்று அவர்கள் கருதினர்.

இவ்வாறாக, பூர்வீகத் தமிழர்கள், பூர்வீகப் பொதுவுடைமைச் சமுதாய அமைப்பில் வாழ்ந்தனர். (தொடரும்) ○

இலக்கிய மேதைகள்—2

லியோ டால்ஸ்டாய்

◆◆

[ஆர். கார்த்திகைவேலு]

◆◆

பத்தொன்பதாம் நூற்றுண்டு, ருஷ்யக் கலை, இலக்கிய வானில், என்றும் அழியாத உன்னதக் கலைச் சிருஷ்டிகளை உருவாக்கிய நட்சத்திரங்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்த காலமாகும். இயல், இசை, நாடகமெனும் முத்துறையிலும் என்றுமே போற்றப்படத்தகுந்த அற்புதக் கலை, இலக்கியச் செல்வத்தை உலகிற்களித்தது ருஷ்யா இந்த நூற்றுண்டிலே. யதார்த்த வாழ்க்கையில் காணக் கிடக்கின்ற எண்ணற்ற காட்சிகளை, மக்கள் வாழ்வில் அன்ருடம் தோன்றுகின்ற அளவிடற்கரிய பல்வேறு பிரச்னைகளை, கலாரசம் ததும்ப அழகிய காவியங்களாகவும், அற்புத நவீனங்களாகவும், சிறந்த சிறுகதைகளாகவும், நாடகங்களாகவும் ஆக்கி தந்தனர் இந்தக் காலத்திய ருஷ்யக்கலைஞர்கள். அத்தகைய மகத்தான கலைப் பொக்கிஷத்தை உலகிற்களித்தவர்களுள் ஒருவர் லியோ டால்ஸ்டாய்.

யதார்த்த வாதத்தை அடிப்படையாகக்கொண்டு, பலபெரும் பிரச்னைகளை, கலைஞனின் கற்பனைக்கண்ணுடன் நோக்கி அற்புதச்சிருஷ்டிகளை உருவாக்கியவர் டால்ஸ்டாய். பண்ணையடிமைத்தனம் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டும் அது பூரணமாகப் பொருளாதார வாழ்விலிருந்து' அகற்றப்படாமலும், அதே நேரத்தில், புதியதொரு சக்தியான முதலாளித்துவம் வளர ஆரம்பித்த காலத்திலிருந்த நிலைகளை படம் பிடித்துக் காட்டுகிருர் தன் நவீனங்கள், கதைகள் மூலம். அன்றைய சமூகத்தில் காணப்பட்ட வஞ்சகத்தையும், பொய்மையையும், பேராசையும் தயைதாட்சணியமின்றி எதிர்த்தார். அரசாங்கத்தின் பலாத்காரத்தையும். முதலாளித்துவச் சுரண்டலையும் பலமாகக் கண்டித்து விமர்சித்ததோடு, ஒரு பக்கத்தில் செல்வம் ஒரு சிலரின் கையிலேயே பெருகி வளருவதையும், மற்ருெருபக்கம் வறுமைப் படுகுழியில் பெரும்பாலான மக்கள் விழுந்திருப்பதையும் அம்பலப் படுத்தியுள்ளன அவரது இலக்கியச் சிருஷ்டிகள். மதத்தின் பேரால் நடைபெறும் அக்ரமங்களை, மத குருமார்களின் போலிவேஷத்தை, ராணுவ வெறியாட்டத்தை, பணத்தாசையின் கோரவிளைவுகளைக் கண்டு சீறி எழுந்தது அவரது கலையுள்ளம்.

அதே நேரத்தில் வாழ்நாள் முழுவதும் உழைத்தும், அந்த உழைப்பின் பயனை அனுபவிக்க முடியாத நிலையிலே வாழ்ந்த கோடிக் கணக்கான விவசாய மக்களின்பால்தான் அவருக்கு அனுதாபம் உண்டு. பலநூற்றுண்டுகளாகப் பண்ணை யடிமைத்தனத்தாலும், அதிகார வர்க்கக் கொடுங்கோன்மையாலும், மத குருமார்களின் அக்ரமத்தாலும், தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, வாழ்வு சீரழிந்து கிடந்த அந்த விவசாய மக்களின் உள்ளங்களிலே பொங்கி யெழுந்த ஆத்திரத்தை, குமுறியெழுந்த சினத்தை, அவரது இலக்கிய சிருஷ்டிகள் பிரதிபலிக்கின்றன. எனவேதான் தத்ரூபமான வாழ்க்கைக் காட்சிகளை அவரது நவீனங்களிலும், கதைகளிலும் நாம் பார்க்கின்றோம்.

ஆனால் இந்த அற்புத இலக்கிய மேதையின் ஆழமான கலையுள்ளம் முழுவதும் நம் நாட்டு மக்களுக்குத் தெரியாது. டால்ஸ்டாயின் தத்துவம் தான் நமக்கு அதிகமாகத் தெரியும். காந்திஜீ தனது குருநாதர் என டால்ஸ்டாயை வர்ணித்ததால், தேசீய இயக்க வளர்ச்சிக் காலத்தில், அதனோடு இணைந்து பிணைந்த நாமமாகத் திகழ்ந்தது டால்ஸ்டாயின் பெயர். ஆனால் அவரது சமுதாயக் கருத்துகளுக்கும், அவரது இலக்கிய சிருஷ்டிகளுக்கும் மலைக்கும் மடுவுக்குமிடையே யுள்ள தூரம்தான். "அக்கிரமச் செயல்களைக் கண்டும் செயலற்றிருக்கவேண்டும்; அதர்மத்தை எதிர்க்கக்கூடாது; தன் ஆத்மாவைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வதே வாழ்வின் இலட்சியம்." எனும் வரட்டுக் கருத்துக்களையடிப்படையாகக் கொண்டதே அவரது தத்துவம். இந்தத் தத்துவத்தின் விளைவுதான், அவரது இறுதிக்காலத்தில் வளர்ந்து வந்த புரட்சி இயக்கத்தோடு அவர் தன்னைப் பிணைத்துக் கொள்வதைத் தடுத்து நிறுத்தியது; உலகையே குலுக்கிய முதல் சோஷலிஸ்ட் புரட்சியின் ஆரம்ப காலத்தைப்பற்றிய சரியான கண்ணோட்டத்தை அவர் பெறும் வாய்ப்பை அளிக்காமல் செய்தது.

ஆனல், அவரது கலை யுள்ளமும், கற்பனசக்தியும் இத்தகைய வரட்டு வேதாந்தத்தால் பாழ்ப்படுத்தப்படவில்லை. அன்றட வாழ்க்கையில் தான் கண்ணுற்றதை, தன் விருப்பு வெறுப்புகளுக்குகந்த மாதிரியில்லாமல், யதார்த்தவாகக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக்கொண்ட கற்பனசக்தியுடனும், கலையுள்ளத்தோடும் அவரது இலக்கியங்களிலே சித்திரிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். மக்களைச் செயலறச்செய்யும் அவரது தத்துவம், யதார்த்த வாழ்க்கையில் நடைபெற்ற போராட்டங்களை, அவர் அழகுறச் சித்திரிப்பதைத் தடுக்க முடியவில்லை. இது எப்படி முடியும் என்பது சிலருக்கு விளங்காத புதிராக இருக்கலாம். ஆனல் அது உண்மையில் புதிரேயல்ல.

ஒரு சிறந்தஎழுத்தாளன் நேர்

மையானவனுக இருந்தால், அவனது அரசியல் கருத்துக்கள் எத்தகையதாயினும், யதார்த்த வாழ்க்கையில் அவன் காண்பதை, தத்ரூபமாகச்சித்திரிக்கமுடியும். இதைத்தான் நாம் டால்ஸ்டாயிடம் காண்கிருேம்.

ஆனுல் இத்தகைய முரண்பாடு, அவரது தத்துவத்திற்கும், அவரது இலக்கிய சிருஷ்டிகளுக்குமிடையே இருந்த முரண்பாடு, ஏதோ தற்செயலாகத் தோன்றியதல்ல. டால்ஸ்டாய் வாழ்ந்த காலத்தில் சமுதாயத்திலே காணக்கிடந்த முரண்பாட்டைத்தான் இது பிரதிபலிக்கிறது. பண்ணையடிமைத்தனம் சட்டபூர்வமாக ஒழிக்கப்பட்டிருப்பினும், அதன் மிச்ச சொச்சங்கள் இருந்துகொண்டிருந்தன; முதலாளித்துவம் அப்பொழுதுதான் வளர்ந்துகொண்டிருக்கின்றது. இவ்விரு சக்திகளுக்கிடையே சிக்கித் திணறினர் விவசாயிகள். ஆனுல் இத்தகைய சமுதாயத்திலிருந்து விடுபடுவதற்கான வழியை அவர்களால் காண முடியவில்லை. தொடர்ந்த உறுதியான, சமரசமில்லாத போராட்டத்தை இறுதிவரை நடத்துவதன் மூலம்தான் இந்த சமுதாயப் புல்லுருவிகளை, சுரண்டல் கூட்டத்தை வேரறுத்து புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதை அவர்களறியார். இத்தகைய தெளிவற்றுத் திகைத்திருந்த விவசாய மக்களின் பிரதிநிதியாக டால்ஸ்டாய் திகழ்ந்ததுதான், அவரது முரண்பாட்டிற்கு அடிப்படைக் காரணம். இந்த முரண்பாட்டை டால்ஸ்டாய் தெளிவாகப் பிரதிபலிப்பதால்தான் "அன்றைய ருஷ்ய சமுதாயத்தின் கண்ணுடி டால்டாய்" என்று மேதை லெனின் வர்ணிக்கிருர்.

இத்தகைய கண்ணேட்டத்துடன் டால்ஸ்டாயின் இலக்கிய சிருஷ்டிகளை நாம் அணுகினுல், எத்தகைய மகத்தான பொக்கிஷமாக அவை திகழ்கின்றன என்பதை நாமறிய முடியும். அவர் காலத்திய விவசாய மக்களின் வாழ்க்கையையும் அவர்களது உள்ளக் கிடக்கைகளையும், உணர்ச்சிகளையும், ஆசாபாசங்களையும், விருப்புவெறுப்புகளையும் வர்ணித்திருப்பதிலே அவரது யதார்த்தவாதப் போக்கை, நாம் தெளிவுறக் காணலாம். அதே போன்று அன்றைய சமுதாயத்தின் மேல்தட்டிலே வாழ்ந்த வசதிபடைத்த கூட்டத்தின் வாழ்வைப்பற்றிய படப்பிடிப்பையும் இந்த இலக்கியச் சிருஷ்டிகளிலே நாம் பார்க்க முடிகின்றது. அவரது கதைகளையும், நவீனங்களையும் படிக்கும் காலத்தில், அவற்றிலே காணப்படுகின்ற காட்சிகள் உயிருள்ளவையாய், நேரில் நடப்பதுபோன்ற பிரமையை நம்மிடையே தோற்றுவிக்குமளவிற்கு யதார்த்தமானதாக விருக்கின்றன.

டால்ஸ்டாயின் யதார்த்தவாதக் கண்ணேட்டம், வெறும் சம்பவங்களை வர்ணிக்கும் வரலாற்று ஏடாக அவரது இலக்கி

யத்தை மாற்றச்செய்யவில்லை. மாருக கலையுள்ளத்தோடும், கற்பனைசக்தியோடும் அவை வரையப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அதிலேதான் அவரது இலக்கிய மேன்மை தெளிவுறத் தெரிகிறது. அவரின் கதாபாத்திரங்களின் உணர்ச்சிகளும், உள்ளக்கிடக்கைகளும், அற்புதமான இலக்கிய ரசனையுடன் அழகாக வர்ணிக்கப்பட்டிருப்பதைப் படித்துக்கொண்டே இருக்கலாமென்றே தோன்றும்.

நம் நாட்டு விவசாயிகள், சென்ற காலத்தில் கிராமிய மக்கள் திடகாத்திரர்களாகவும், தேகாரோக்கியமுடையவர்களாகவும் விளங்கினர்களென்றும், ஆனல், இன்று, வளர்ந்து வரும் இளைஞர்களின் பகுதி திராணியற்று, உழைக்கும் சக்தி அதிகமில்லாதிருக்கின்றது என்றும் கூறுவது சகஜம். குறிப்பாக கிராம வாழ்க்கையின் இடைத்தட்டிலும், மேல்தட்டிலுமுள்ள உழைப்பை அறியாத இளைஞர்களைப் பற்றி இவ்விதம் கூறுவர். இந்த நம் நாட்டு விவசாயிகள் டால்ஸ்டாயின் "முட்டையளவு பெரிய தானியம்" என்னும் கதையைப் படித்தால், டால்ஸ்டாய் தங்களைப்பற்றித்தான் எழுதியுள்ளதாக உடனே கூறிவிடுவர். ஆம், அந்தக் கதை மேலே குறிப்பிட்டுள்ள நம்பிக்கையை அப்படியே பிரதிபலிக்கின்றது. இதே போன்றுதான் விவசாயிகளைப்பற்றிய கதைகளில் பல, நம் நாட்டு விவசாய மக்களின் உணர்ச்சிகளுக்கும் பொருந்தக்கூடியதாய் அமைந்துள்ளன. யதார்த்த நிலைமைகளை வர்ணிப்பதில் அத்தகைய சிகரத்தை டால்ஸ்டாய் எட்டிப் பிடித்ததால் தான் உலகெங்கும் அவரது இலக்கியம் பேரார்வமுடன் விரும்பப்படுகிறது.

அதேபோன்று, குழந்தைகளுக்காக அவர் எழுதியுள்ள கதைகள் குழந்தைகள் மட்டும் படிக்க வேண்டியவைகளல்ல. முதியோர்களும் விரும்பிப் படிக்கக் கூடியவையே. அன்றைய ருஷ்ய சமுதாயம் எழுப்பிய பல்வேறு பிரச்னைகளுக்குக் குழந்தைகள் வாயிலாக, அவர்களின் பாஷையிலே சரியான வழி காண்பிக்கிருர் டால்ஸ்டாய்.

அவரது நவீனங்கள் இன்று உலக இலக்கியச் செல்வத்தின் ஒரு பகுதியாகிவிட்டன. "அன்னு கரீனு" "போரும், சாந்தியும்" என்ற இரு நவீனங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. உள்ளத்திலே தோன்றும் உணர்ச்சிகளை, வாழ்க்கையில், குடும்பங்களில் காணப்படும் முரண்பாடுகளை, ருஷ்யசமுதாயத்தின் மேல்தட்டில் வாழ்கின்றவர்களின் போலி வாழ்க்கையை, குறிப்பாக அன்னு, அவளது கணவன். அவ்விருவரின் வாழ்க்கையில் புகுந்த இளைஞன். ஆகியவர்களின் உணர்ச்சிகளை எவ்வளவு அழகாக, ஆழமாக, கவிதா உள்ளத்துடன், கலைக்கண்கொண்டு, "அன்னு கரீனு"வில் டால்ஸ்டாய் வர்ணிக்

கிறார். அதே போன்றுதான் "போரும் சாந்தியும்". நெப்போலியனின் ருஷ்யப் படையெடுப்பு காலத்திய ருஷ்யாவை, ஏன் அக்காலத்திய ஐரோப்பாவையே, நம்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது, அந்த இலக்கியப் பொக்கிஷமான "போரும் சாந்தியும்".

சிறந்த சிந்தனையாளன், கற்பனைக் கடல், இலக்கிய மேதை, பாமர மக்களின் நண்பன், கொடுங்கோன்மையின் விரோதி, லியோ டால்ஸ்டாய் மறைந்து இன்றைக்கு நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. எண்ணற்ற கதைகளையும், சிறந்த நவீனங்களையும் உலகிற்களித்த டால்ஸ்டாய் 1828 ஆம் ஆண்டில், நல்ல வசதி படைத்த நிலப் பிரபுத்துவக் குடும்பத்திலே பிறந்தார். நிலப் பிரபுக்களின் கோலாகல வாழ்க்கையும், விவசாயிகளின் பட்டினி வாழ்வும் அவருக்கு நன்கு நேரடியாகத் தெரியும். அதைத் தான் அவரது அற்புத இலக்கியச் சிருஷ்டிகள் தெட்டத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றன. இத்தகைய மகோன்னத இலக்கியப் பொக்கிஷத்தை உலக முழுவதற்குமளித்த டால்ஸ்டாயை, அன்றைய ருஷ்ய இலக்கிய, கலை வானில் ஒளிவிட்டுப் பிரகாசித்த மாபெரும் மின் ஒளிகளான, புஷ்கின், கோகோல், ஆண்டன் செக்காவ், துர்கனீவ் ஆகியவர்களின் வரிசையில் வைத்து உலகம் போற்றிப் புகழ்கின்றது.

வறுமையையும், கொடுங்கோன்மையையும், சுரண்டலையும், சுகபோக வாழ்வையும், மதவாதிகளின் பித்தலாட்டத்தையும், பேனாவின் துணைகொண்டு அம்பலப்படுத்திய அந்த இலக்கிய மேதை டால்ஸ்டாய் 1910ஆம் ஆண்டு நவம்பரிலே இயற்கை யெய்தினார். "டால்ஸ்டாய் மறைந்துவிட்டார்; அவர் தத்துவத்திலே பிரதிபலித்த, அவரின் கலைத் திறமையால் உருவான இலக்கிய சிருஷ்டிகளிலே வர்ணிக்கப்பட்ட பலவீனமான, திராணியற்ற புரட்சிக்கு முந்திய ருஷ்யா இறந்த காலத்தோடு இணைந்து விட்டது. ஆனால் இறந்த காலத்தோடு இணையாத ஒன்று அவர் விட்டுச் சென்ற பாரம்பரியம். அது எதிர்காலத்தைச் சேர்ந்தது" என்று அவரின் மறைவு பற்றி எழுதும்போது லெனின் கூறியுள்ளார். ஆம், டால்ஸ்டாய் விட்டுச் சென்ற பாரம்பரியம், அவரது அற்புத இலக்கியச் சிருஷ்டிகள், எதிர்காலத்தைச் சேர்ந்தவை தானே? அதிலென்ன ஐயமிருக்கின்றது? ★

Edited and Published by V. Vijaya Bаskaran at 1, Raja Annama Chettiar Road, Madras-7. Printed by G. Alavandar at Janasakthi Pr 38, Mount Road, Madras-6